விலை ரூபா 1-00 ★

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 வைகாசி 4 றஜப் 23 இதழ் 94
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18—5—82



★ விமலராஜாவை விடுதலை செய்யுமாறு கோரி ★

# யாழ். பல்கலைக் கழக மாணவர் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

## இரண்டாயிரம் மாணவர்கள் கட்டுக்கோப்புடன் கலந்துகொண்டனர்!

### கைதான 5 மாணவர்களும் அரைமணிநேரத்தில் விடுதலை

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த கலை, விஞ்ஞான, நுண்கலை, மருத்துவ பீடங்களைச் சேர்ந்த சுமார் 2, 200 மாணவர்கள் அப்புத்துரை விமலராஜாவை விடுதலை செய்யக்கோரி பொலிசாரின் தடை உத்தரவையும் மீறி பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் நடத்தினர்.

ஊர்வலத்தின் போது பொலிசாரினுல் அழைத்துச் செல்லப்பட்ட ஐந்து மாணர்கள் அரை மணி நேரத்தில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவா திரு. கே. என். இராஜநாயகம் தலைமையில் நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தை தொடர்ந்து காலை 8-30மணிக்கு ஊர்வலம் ஆரம்பமானது.

#### ஊர்வலம் தடுக்கப்பட்டது

இந்த ஊர்வலம் இராமநாதன் வீதிவழியாக பரமேஸ்வ்ரா சந்தியை அடைந்து பலாலிவீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி வரும் போது யாழ். எம். பி. திரு, வே. யோகேஸ்வரனின்,! [மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தலின் போது ஆயுதப்படையினரால் எரித்து நாசமாக்கப்பட்ட]இல்லத்துக்கு முன்பாக பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டதும் மாணவர்கள் எல்லோரும் கலைந்து செல்லாமல் அந்த இடத்திலேயே சுலோகங்களை கோஷித்தவண்ணம் இருந்துவிட்டனர். இதனுல் இப்பாதை தடைபட்டு வாகனப்போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்து விட்டது.

#### மீண்டும் தடை

இச் கூட்டத்தில் அங்கு பொலிசாருக்கு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய யாழ். பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ன்பெக்டர் 'வாக்கிடோக்கி' மூலம் யாழ். பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன் பின்னர் ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, வழியாக வின்சர் தியேட்டர் சந்தியை அடைந்து ஸ்ரான்லி வீதிவழியாக முட்டாஸ் கடை சந்தியை நோக்கி வரும் பொழுது அங்கு கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகள் வீதியை தடை செய்த தாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களான ரகுபதி, ராதாகிருஷ்ணன், ஜெயச்சந்திரன், நித்தியானந்தன, இளவளகன் ஆகியோரை கைதுசெய்து விசாரணைக்காக யாழ். பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

#### பொலிஸ் பாதுகாப்பு

அதே நேரத்தில் யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. றிச்சார்ட் விஜயசேகரா தலைமையில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராசா, திரு. நிஹால் பெர்ணுண்டோ, தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் தவலிங்கம் ஆகியோருடன், உதவி இன்ஸ்பெக்டர்கள் சார்ஜன்ட்டுகள், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் துப்பாக்கிகள், குண்டாந்தடிகளுடன் கடமையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர்.

#### ''மாணவர்களை விடுதலை செய்க'

ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்த மாணவர்களில் கைது செய்யப்பட்ட 5 மாணவர்களையும் விடுதலைசெய்தால் ஒழிய தாங்கள் இந்த இடத்தை விட்டு புறப்படப்போவதில்லை என்று பிடிவாதமாக நின்ற மாணவர்கள் முட்டாஸ்கடை சந்தியில் காங்கேசன் துறை வீதியில் அமர்ந்துவிட்டார்கள் அப்பொழுதும் சுலோகங்களை மாணவர்கள் கோஷித்துக் கொண்டே நின்றனர்

ஊர்வலத்தைப் பார்க்கக் குழுமி நின்ற பொது மக்களை கலைந்து செல்லுமாறு பொலிசார் கேட்டுக்கொண்டபொழுதும் அவ்விடத்தைவிட்டு செல்லாமல் நின்றவர்களை பொலிசார் விரட்டினர் வண்ணுர்பண்ணை சிவன்கோவில் மேற்கு வீதி வழியாகவும், ஸ்டான்லி வீதி வழியாகவும் வந்த இ. போ. ச. பஸ்கள், மினிபஸ்கள் லொறிகள், கார்கள் நகரமுடியாமல் ஸ்தம்பித்துவிட்டன. சுமார் முப்பது நிமிஷங்கள் வரை கடுமையான வெயிலில் மாணவர்கள் கைதுசெய்யப்பட்ட 5 மாணவர்களையும் விடுதலை செய்யுமாறு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.

யாழ். பொலிஸ் அதிபருடன் மாணவர் அவை நடவடிக்கை குழுத்தலைவர் சு. ஸ்ரீஸ்கந்த

[8-ம் பக்கம் பார்க்க]

அரிய சந்தர்ப்பம்

Telex, Diploma in Computer Programming
பயிற்சி வகுப்புக்கள் முழுமையான
செய்முறைப் பயிற்சியுடன் COBOL – BASIC
ஆரம்பம்: 22-5-82
O/L அல்லது N. C. G. E. படித்த
இரு பாலாரும் சேரலாம் — நேரில் வரவும்.
முன் அனுபவம் தேவை இல்லை
நாஷனல் அக்கடமி,
(அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது)
11, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3227

## யாழ். பல்கலைக்கழகமாணவர் இன்றும் பகிஷ்கரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்றும் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கப் போவதாக மாணவர் அவைத் தலைவர் திரு. கே. என்.இராசநாயகம் தெரிவித்தார்,

கைது செய்யப்பட்ட மாணவன் விமலராசா பற்றிச்சாதகமான முடிவு வரும்வரை போராட்டம் பல்வேறு வகைகளில் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்,

#### இன்று ஆலோசனை

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள், யாழ்.பல்கலைக்கழகமாணவர் அவைப் பிரதிநிதிகளுடன் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் பகிஷ்கரிப்புச் சம்பந்தமாக ஆராயவுள்ளார்கள்.

ஒன்றியத் தலைவர் திரு. கே டபிள்யூ. அமரசிறி தலைமையில் இவ்வாலோசனைக் கூட்டம் நடைபெறும். [மா]

## ''இம்மண்ணின் உரிமையாளராக இங்குள்ள தமிழர் மாறவேண்டும்''

[வவனியா]

''இந்தியாவில் திருப்பதியை இழந்தபோதுகூட தமிழ்நாடு குரல எழுப்பத் தவறியது ஆனுல் கடந்த ஆண்டு இலங்கைத் தமிழாகளுக்கு இன்னல் ஏற்பட்டபோது தமிழ்நாடு உணர்ச்சியுடன் கண்டனம் தெரிவித்தது.''

இவ்வாறு உலகத் தமிழ்ப் பணபாட்டு இயக்க இந்தியக் கிளையின் பொதுச்செயலாளர் டாக்டர் அரு. கோபாலன், காந்திய இயக்கத்தின் ஆதரவில் புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற பாரதி நூற்றுண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது கூறினுர்.

விழாவினை வ.தெ.த.பி பல

[8-ம் பக்கம் பார்க்க]

## இ.தொ.க. மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிலாளர்கழக பேராளர் மகாநாடு இம்மாதம் 23ம் திகதி நுவரெலியாவில் நடைபெறவிருக்கிறது.

மன்னுர் எம். பி. திரு. பி. சூசைதாசன் தலைமையில்நடைபெறும் இம்மகாநாட்டில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோர் உரையாற்றுவர் (மா)

## கிளிநொச்சியை தனிக்கல்வி மாவட்டமாக உருவாக்க வேண்டும்

### மாணவர் ஒன்றியம் கோரிக்கை

[கிளிநொச்சி]

கிளிநொச்சித்தொகுதி கல்வியில் ஏனைய தொகுதிகளை விட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்நிலை மாறவேண்டுமானுல் முதலி இத்தொகுதியை பின்தங்கிய தனிக்கல்வி மாவட்டமாக பிரகடனப்படுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு கோரும் மகஜர் ஒன்றை கிளிநொச்சிப் பிரதேச மாணவர் ஒன்றியத்தின் சார்பில்' அதன் அமைப்பாளரும். அரசியல்துறைப் பட்டதாரியுமாகிய திரு. ரி. தர்மானந்தசிவம் கல்விஅமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. ஆனந்தசங்கரி எம். பி. ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- கிளிநொச்சித்தொகுதியில்ஆசிரியர்

(8-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

இன்று சிறையில் அகப்பட்டுக் கிடக்கும். திருடன் மற்றவர்களைவிட நேர்மையற்றவன் என்று சொல்ல முடியாது. அறியாமையால் திருடியவனே பெரும்பாலும் சிறைக்கூடத்திற்குச் செல்கின்றான். ஆனால் அவனைப் போன்ற மற்றொருவன் பொருந்திய முறையைப் பின்பற்றுவதால் பாராளுமன்றத்திற்குச் செல்கின்றான்.

—அறிஞர் ஷா.

# நமது நோக்கு

## "கவுத ரஜா? மத்யூ ரஜா!"

சுமார் 50 வருடங்களுக்குமுன் பிரபலடாக்டர் சரவணமுத்து குடும்பத்தினர் கொழும்பு மாநகரில் அனுபவித்த செல்வாக்கு, பொன்னம்பலம் சகோதரர்கள் நாடு முழுவதிலும் பெற்றிருந்த மதிப்புக்கு ஒப்பிடக்கூடியது.

அரசாங்கசபைப் பொதுத் தேர்தல் ஒன்றில் சிங்கள மக்கள் – பொதுமக்கள் — டாக்டர் ரத்னஜோதி சரவணமுத்துவுக்கு நல்கிய அமோக ஆதரவில் நிகழ்ந்த ஒரு காட்சி; ஆயிரக்கணக்கான மக்கள் நகர் ஊர்வலத்தில் ''கவுத ரஜா? சராரஜா'' என்ற கோஷத்தை வானம் கிழியும்படி எழுப்பியபடி போனார்கள்.

தேர்தலில் வெற்றி பெற்ற டாக்டர் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் தோல்வியுற ஆத்திரங்கொண்ட வாக்காளர் அவருடைய மனைவி திருமதி நேசம் சரவணமுத்துவை அந்த இடத்துக்கு அனுப்பிவைத்து ஒரு புதிய வரலாற்றை இயற்றினார்கள்.

இக் கதையில் நாம் சுட்டிக்காட்ட விரும்புவது, பொதுவாக சிங்கள மக்கள் இனத்துவேஷமற்று வாழ்ந்த காலத்தை நினைவூட்டவே; அதுமட்டுமல்ல. அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த தலைவர்கள் எவரையும் அரசரென மதிக்கும் ஆவலுடையவர்கள் என்பதும் குறிப்பிடவேண்டும்.

தமிழ்மக்கள் மத்தியில் பேராதரவுபெற்ற திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தையோ அல்லது திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்தையோ ராஜாக்களாக தமிழ்மக்கள் கோஷம் செய்ததில்லை. பதிலாக 'எங்கள் பலம் பொன்னம்பலம்' 'எங்கள் நாயகம் செல்வநாயகம்' என்ற கோஷங்கள் சர்வசாதாரணமாக எழுப்பப்பட்டன.

இன்று சிங்கள மன்னர் தமிழ் மன்னர் சரித்திரங்கள், ஆட்சிகள் கடுமையாக அடிபடுவதால், நல்லூர் ராஜதானிக்கு 'கவுத ரஜா? மத்யூரஜா'' என்று விகடமாகவேனும் பேசப்படுகின்றது. இதில் எது விகடம்?

உண்மையில் 'சீமெந்து' அமைச்சர் திரு. சிறில் மத்யூ விரும்பினால் நல்லூர் ராஜாவாக வரலாம்; தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டார்கள். நாம் நம்பிக்கைகொள்வதற்குக் காரணம், ஒரு சிங்களப் பிரமுகர், அதுவும் இணைக்கும் ஆற்றல்மிக்க சீமெந்துக்குப் பொறுப்பானவர் தமிழ்மக்களின் ராஜாவாக அமைந்தால், இன்று அறியாமையால் நிகழும் தமிழ் மக்கள் பாகுபாடு – தரப்படுத்தல் தொடக்கம் தடுப்புக்காவல், சித்திரவதை வரைக்கும் முற்றாக ஒழிந்துவிடும்.

தமிழ்ப் பிரதேசத்தில் அதுவும் திரு. அமிர்தலிங்கத்தின் கே. கே. எஸ். தொகுதியில் பலகோடி ரூபா செலவில் அவசரம் அவசரமாக உருவாகும் துறைமுக வேலைக்கு தமிழ் எம். பி. க்கள் ஒத்துழைப்புத் தரவில்லையே என்று அமைச்சர் கவலையுற்றிருக்கிறார். காரணம்: அமைச்சரில் உண்டான துவேஷம்? அதற்குக் காரணம் அமைச்சருக்கு தமிழர்களில் உண்டான துவேஷம்? அதற்கு காரணம்: பயங்கரவாதத்துக்கு காரணம்? அமைச்சர் அரசனாய் அமர்ந்தன்றே அறிந்து விடுவார்! எனவே தமிழ் ராஜதானியில் ! ஒரு சிங்கள மன்னனும், சிங்கள ராஜதானியில் அழகக்கோனாரின் ஆதிநாமம் கோட்டேயில் வழங்கும் வண்ணம் ஒருதமிழ் மன்னனையும் – திரு. அமிர்தலிங்கத்தையும் அமர்த்திவிட்டால் இன்று என்றும் தணியாத தீ போல் வளரும் இனத்துவேஷம் சட்டெனத் தணியும்.

ஒரே ஒரு நிபந்தனை; தமிழ் மக்கள் ஒருபோதும் பெயர் மாற்றத்துக்கு உடன்படமாட்டார்கள். அழகேஸ்வரன் என்ற பெயர் எவ்வாறுவந்ததென்பதை நாமறியோம். ஆனால் இன ஒற்றுமைக்கு நாம் கூறும் பரிகாரம் ஜனாதிபதிக்கு உவப்பாயிருந்தால் திரு. அமிர்தலிங்கம் அந்தப்பெயருடன் ஆட்சி புரிவதே இரு சமூகங்களையும் 'சங்கிலி' மன்னன் போல்– இறுகப் பிணைக்கும் வழியாகும்.

ஜனநாயக ஆட்சியில் மன்னர்களுக்கு இடமளித்தல் பொருந்தாத செயல் போலிருக்கும். ஆயினும் விசேட ராஜதானிகள் – மாபெரும் மாவட்டங்கள் அரசைப் போன்ற தலைவர்கள் ஆட்சியில் நடைபெற வழி வகுத்தால் கோட்டே–நல்லூர் (சங்கிலி – சீமெந்து] இணைப்பு நிச்சயம் சிங்கள – தமிழ் தேசியத்துக்கு இணைப்புப் பாலமாகும்.

## வரவேற்கின்றோம்

பல்கலைக்கழக மாணவர்கள் பாடசாலை மாணவர்கள் படிப்பு பாழாகவேண்டியிருக்கிறதே என்ற கவலையுடன் பல்கலைக்கழக பட்டதாரி மாணவன் விமலராஜாவின் சார்பில் நடந்த பகிஷ்கரிப்பை ஆதரித்தோம்.

இன்றைய செய்தியில் தடுப்புக்காவலில் இருக்கும் அந்த மாணவன் எதிர்வரும் ஆகஸ்ட் பட்டப்பரீட்சைக்குத்தோற்ற பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு விசேட அனுமதி வழங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதனை நாம் மனமார வரவேற்கின்றோம். விமலராஜா விவகாரம் இவ்வளவு தூரத்துக்குப் போனது ஆட்சிக்கு ஒரு அபகீர்த்தியென்பது எமது பணிவான கருத்து.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பெரும்அபாயத்தை உண்டுபண்ணவல்லது. ஜனநாயக மரபுள்ள நாட்டில் சர்வாதிகாரத்தை பின்கதவால் விருந்தினராக அழைக்கும் பாங்குடையது.

அவசரகாலச் சட்டமே திருமதி பண்டாரநாயக்காவின் அரசியலுக்கு யமனாக வந்தது. அதனை நாள்தோறும் கண்டிக்கும் ஐ. தே. கட்சிஆட்சி அதனைவேறு விதத்தில் நுழைய வழிவிடுவதானால் அம்மையாரையும் அவருடைய கடந்த ஆட்சியையும், நாகரிகமற்ற முறையில் வசைபேசுவது பொருத்தமாகுமா?

எனவே தடுப்புக்காவலில் இருக்கும் இளைஞர்களுக்குரிய நிவாரணம் காண்பது அரசின்அவசிய கடமையாகும்.

"இறுதிமூச்சுவரை

# நாட்டுக்கூத்துக் கலையை வளர்க்க உழைத்தவர்"

## பூந்தான்ஜோசப் மறைவுக்கு அமிர் இரங்கல்

[அரியாலை]

தமிழ்மக்களின் பாரிய கலைகளிலொன்றான நாட்டுக் கூத்துக் கலையை தனது இறுதி மூச்சுவரை கட்டிவளர்த்த நாட்டுக்கூத்துக் கலாநிதி யோசேப்பு அவர்களின் திடீர் மறைவு தமிழ்பேசும் நல்லுலகிற்கு பேரிழப்பாகும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம் அமரர் நாட்டுக்கூத்துக் கலாநிதி ம. யோசேப்பின் இறுதி அஞ்சலியின்போது இரங்கலுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கலாநிதியின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து ஊர்வலமாக ஈச்சமோட்டை சனசமூக நிலைய மண்டபத்திற்கு பொதுமக்களின் அஞ்சலிக்காக எடுத்துவரப்பட்டு அழகிய மேடையில் பூதவுடல் அடங்கிய பெட்டி வைக்கப்பட்டது.

சனசமூக நிலையத் தலைவர் திரு. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இறுதி அஞ்சலியின்போது எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கலாநிதி யோசேப்பு நாட்டுக் கூத்துக்கலைக்கு தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து உழைத்தபெருமகனாவார். நாட்டுக்கூத்தை முழு அளவில் ரூபவாகினிசேவையில் நடாத்தவேண்டுமென்ற அவரது கனவு அவராலே நிறைவேற்றப்படாமல் போனது பெரிய துரதிஷ்டமாகும். அவரது கனவை நாம் கூடியவிரைவில் நிறைவேற்ற இராஜாங்க அமைச்சருடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்துதருவோம் என்று கூறினார்.

யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரன் அஞ்சலுரைநிகழ்த்துகையில் நாட்டுக்கூத்து கலாநிதியின் மறைவு தமிழ்பேசும் நல்லுலகிற்கு மட்டுமல்ல நாட்டுக் கூத்துக்கே பெரிய நஷ்டமாகும். அவர் நாட்டுக்கூத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளை எவரும் மறக்கமுடியாது. தன்னையே நாட்டுக்கூத்துக் கலைக்கு அர்ப்பணித்து உழைத்த கலாநிதியின் பிரிவு தமிழ் நாடகக் கலைக்கே பெரிய நஷ்டமாகும் என்றார்.

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலால சுந்தரம் அஞ்சலியுரை நிகழ்த்துகையில் நாட்டுக் கூத்து என்றால் கலாநிதி யோசேப் என்ற நிலையில் வாழ்ந்த கலாநிதியின் திடீர் மறைவு நாட்டுக்கூத்துக்கலைக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவருக்கு வயது சென்ற நேரத்திலும் தான் ஏற்று நடிக்கும் பாத்திரத்திற்கேற்ப அவரது ஆடலும் பாடலும் அமைந்திருக்கும் முறை நாட்டுக்கூத்தில் அவர் கொண்டிருந்த பற்றை வெளிப்படுத்தியது. பல கலைஞர்கள் தோன்றி மறைகிறார்கள். அவர்களுடன் அவர்கள் கட்டி வளர்த்த கலையும் மறைகிறது. ஆனால் கலாநிதி யோசேப் நாட்டுக்கூத்துக்கலையைக் கட்டி வளர்க்க ஒரு பரம்பரையை உருவாக்கியுள்

(7ம் பக்கம் பார்க்க)

(நாட்டுக் கூத்துக் கலைஞர் பூந்தான் ஜோசப் மறைவையொட்டிய அஞ்சலி)

## பூந்தான் புகழ் நிலைக்கும்!

தேன்நிகர் தமிழை தேவரும் விரும்பி
தீன்பல மறந்து தீஞ்சுவை ரசித்தார்
பூந்தான் என்ற புகழுறு பெயரை
மாந்தரும் கேட்டால் மகிழ்வது கொள்வார்
நாவலர் பாடும் நாட்டுக் கூத்தை
காவலனாக காத்தான் பூந்தான்
சாதிகள் பார்க்கா சான்றோன் நீதான்
நீதியில் தர்மன் நீயெனக் கண்டோம்
கலையது ஓங்க கனபொருள் தந்தாய்
தலைமகன் இறந்தாய் தவிக்கிறார் மக்கள்
ஐம்பது வருடம் ஆற்றிய சேவை
எம்மவர் மனத்தில் என்றும் நிலைக்கும்
வானொலி மூலம் வழங்கிய பாட்டை
நாமினி வளர்ப்போம் நல்லதைச் செய்தாய்
வாழ்க்கை தன்னை வளமுறு கலைக்காய்
மாழ்வது மட்டும் மன்னாய் தந்தாய்.

—பாஷையூர் தேவதாசன்

வவனியாப் பகுதியில்

## தபால்-தந்திசேவையின் சீர்கேடு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ள பிரதேசத்தில் யோகபுரம், துணுக்காய் என்னும் இரு தபாலகங்கள் அமைந்துள்ளன. 5 வருடங்களுக்கு முன்பு வவனியாவிலிருந்து தொலைபேசி இணைப்புகளிருந்தன. தற்போது வவனியா, மாங்குளம் ஆகிய தபாற்கந்தோர்களிலிருந்து நேரடித் தொலைபேசி வசதிகளுமிருந்து வந்தன. வவனிக்குளம், யோகபுரம், துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் அநேக அரசாங்க தாபனங்கள் இந்த தொலைபேசி வசதியை பெற்றுவந்தன. குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணம் பகுதிகளுடனும் இங்கிருந்து தொலைபேசியில் சுலபமாகக் கதைத்துவந்தார்கள். இதனால் பல தாபனங்களும் பல நன்மையைப் பெற்றுவந்தன.

தற்போது மாங்குளம்–துணுக்காய் வீதியிலிருக்கும் தந்திக்கம்பிகள் தொலைபேசி சில அறுந்து விழுந்து சகல சேவைகளையும் இழந்து இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டன. இதனால் இப்பகுதி பொதுமக்கள், அரசாங்க தாபனங்கள் எல்லாம் தந்தித் தொடர்புகளை இழந்து தமது சேவையை பல சிக்கலின் மத்தியில் செய்யவேண்டியநிலைக்கு ஆளானார்கள். யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய பகுதிகளிலிருந்து இங்கு நேரடித்தொடர்புகள்கூட செய்யமுடியாமல் இருக்கின்றது. இந்நிலைமை 2 மாதங்களுக்குமேல் நீடித்துவருவதை பல தாபனங்கள் எடுத்துக்காட்டியும் ஒரு முடிவும் தெரியாமல் பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர். தொலைத் தொடர்பு திணைக்களத்தினர் தூங்குகிறார்களா? அல்லது இப்பகுதி புறக்கணிக்கப்படுகிறதா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இப்பகுதி தபாலகங்களில் சில நாட்களில் முத்திரைகூட கிடையாது. சில சமயங்களில் பொதுமக்கள் முத்திரையின்மையால் கடிதங்களைக்கூட அனுப்பமுடியாமல் பரிதவிக்

(7ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## ஜி. ஜி. பெற்ற அமோக வெற்றி

10–5–82 திகதியிட்ட ''ஈழநாடு'' பத்திரிகையின் 3ம்பக்கத்தில் ''தே தலைப் பகிஷ்கரித்தால் தமிழினம் பாதிக்கப்படும்'' என்ற தலைப்பிட்ட செய்தியில் திரு. மு. சிவசிதம்பரம் பேசியபோது ''தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் பெறாத அமோக வெற்றியை 1977 இல் திரு. இராசலிங்கம் உடுப்பிட்டித் தொகுதியில் பெற்றுக்கொண்டது ஒரு சாதனையாகும்'' எனக் கூறியதாகபிரசுரிக்கப்பட்டுள்ள. திரு இராசலிங்கத்தின் அமோக வெற்றியை நாங்கள் முழுமனதாக வரவேற்கிறோம்.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் பருத்தித்துறைத் தொகுதியில் 1934ஆம், 1936 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் போட்டியிட்டார். அப்பொழுது அந்தத் தேர்தல் தொகுதியில் இருந்த மொத்த வாக்குகளின்

(7–ம் பக்கம்பார்க்க)

## போக்லண்ட் நெருக்கடி

# பிரதமர் தட்சர் தளபதிகளுடன் திடீர் ஆலோசனை!

லண்டன், மே 17

போக்லண்ட் தீவுகளின் மத்தியிலுள்ள போக் கால்வாயை நேற்று பிரிட்டன் தாக்கியது. இரண்டு ஆர்ஜென்டீனு ஜெட் விமானங்களையும் ஒரு போர்க்கப்பலையும் பிரிட்டிஷ் படைகள் தாக்கியபோதும் உயிராபத்து ஏற்படவில்லை என பிரிட்டன் அறிவித்துள்ளது.

போக் கால்வாயை தாக்கிய பின்பு பிரிட்டிஷ் போர் விமானங்கள் போக்லண்ட் தீவுகளின் தலைநகரான போட்ஸ்ரான்லியைத் தாக்கின.

போக்லண்டை முற்றுகை இடுவதா இல்லையா என்பது குறித்து பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் ஐ. நாவுக்கான பிரிட்டிஷ் பிரதிநிதியையும் படைத் தளபதிகளையும் நேற்று அழைத்து தமது அலுவலகத்தில் திடீர் ஆலோசனை நடத்தினர்.

இதேவேளையில் போக்லண்ட் பிரச்னைக்கு தீர்வு காணும் பொருட்டு ஐ. நா. செயலாளரிடம் கையளிக்க அறிக்கை தயாரிப்பதில் ஆர்ஜென்டீனு ஈடுபட்டுள்ளது

இது இவ்வாறிருக்க இன்று போக்லண்டில் எந்தவித தாக்குதலும் இடம்பெறவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

விரைவில் இராஜரீக தீர்வு ஏற்பட்டுவிடும் என ஐ. நா. நம்பிக்கை தெரிவித்துள்ளது. [கு]

## ஆராய்ச்சி

சென்னை, மே 17

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் நாட்டிலுள்ள 22 ஆயிரம் கிராமங்களில் நிலவும் கலை, கலாச்சாரங்கள் பற்றி யூன் மாதம் ஆராய்ச்சி மேற்கொள்ள இருககிறது. [கு]

## நிதி மோசடி

திருச்சி, மே 17

மேற்கு ஜெர்மனியிலிருந்து மிஷனரி ஒன்று 10 வருடங்களாக அனுப்பியநிதியை மோசடி செய்ததாக திருச்சியிலுள்ள 5 மிஷனரிமாருககு எதிராக வழக்கு தாக்கல்செய்யப்பட்டது. [கு]

## பிலிப்பைன்சில் ராஜினுமாச் செய்த நீதிபதிகள் மீண்டும் நியமனம்

மனிலா, மே. 17

பிலிப்பைன்சில் அண்மையில் இராஜினுமாச் செய்த 14 நீதிப களில் 12 நீதிபதிகளை மீண்டும் சேவையில் அமர்த்தியுள்ளதாக ஜனுதிபதி திரு. மார்க்கஸ் அறிவித்துள்ளார்.

சட்டப்பரீட்சை யொன்றில் நீதிபதி ஒருவர் தனது மகளின் பெறுபேற்றில் தலையிட்டார் என பெண்நீதிபதி ஒருவர் தெரிவித்த புகாரையடுத்து 14 நீதிபதிகள் இராஜினுமாச்செய்தது தெரிந்ததே.

இருநீதிபதிகள் இம்மோசடியில் பங்கு கொண்டமையால் அவர்களை மீண்டும் தாம் சேவையில் அமர்த்தவில்லை எனவும் மேலும் புதிதாக 3நீதிபதிகளை தாம் நியமித்துள்ளதாவும் ஜனுதிபதி திரு.மார்க்கஸ் அறிவித்துள்ளார். [கு]

## நீர்ப்பாசனத்துக்கு காற்றுடி

சென்னை, மே 17

நீர்ப்பாசனததுக்கு காற்றுடி இயந்திரததை பயன்படுத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

மின்சாரம் அல்லது எரிபொருட்களின் உதவியின்றி இயங்கக்கூடியதும் மிகவும் சிக்கனமானதுமான கற்றுடி இயந்திரப்பாவனையை ஊக்குவிப்பதன்மூலம் பெரும் பலன் கிடைககுமென எதிர்பார்ப்பதாலேயே இந்நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. [இ]

## தரைமட்டமாக்கப்பட்டது!

லண்டன், மே 17

இங்கு அமைக்கப்பட்ட நான்கு நவீன மாடிக்கட்டிடங்கள் நேற்று இடிந்து தரைமட்டமாக்கப்பட்டன.

நவீன முறையில் அமைக்கப்பட்டிருந்தபோதும் காற்றோட்டம் போன்ற வசதிகள் அற்று குடிவாழ்வதற்கு தகுதியற்ற முறையில் இம்மாடிக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்ததாம்.

இக்கட்டிடங்களைப் பார்வையிட்ட உயர் அதிகாரிகள் இந்நவீன மாடிக்கட்டிடங்களை தரைமட்டமாக்கும்படி உத்தரவிட்டதுடன் இக்கட்டிடங்களை நிர்மாணித்த ஒப்பந்தக்காரர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (கு)

## வெசாக் மின் அலங்காரம்

(மாவிட்டபுரம்)

வெசாக் கொண்டாட்டங்களையொட்டி யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் உப அலுவலகங்கள் யாவற்றிலும் மின் அலங்காரங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன,

வெசாக் கொண்டாட்டங்களையொட்டி இம்மாதம் 7ம் திகதியிலிருந்து 15ம்திகதிவரை மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகங்கள் யாவற்றையும் மின் பல்புகளால் அலங்காரம்செய்யுமாறு அபிவிருத்தி சபையின் பிரதிச் செயலாளர் அறிவித்ததையடுத்து இந்த அலங்காரங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## இவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவர்?

வாஷிங்டன், மே 17

அமெரிக்காவில் வாழும் நாசிசவாதிகளை கண்டுபிடிப்பதில் அமெரிக்க நீதித்துறை இலாகா ஈடுபட்டுள்ளது.

இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பிற்பகுதியில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து பலநாசிச குற்றவாளிகள் அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட்டிருந்தனர்.

முன்னுள் அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜிம்மி காட்டரும் நாசிசவாதிகளை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என உத்தரவுபிறப்பித்திருந்ததுதெரிந்ததே. (கு)

# யாழ். அபிவிருத்தி சபையில் கேட்டவை

ஏ.வி. மாணிக்கம்

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம்: கிராமோதய சபைகளுக்கான கருமமாற்றுபவர்கள் எழுதுகோல், கடதாசி போன்ற உபகரணங்களின்றி கஷ்டப்படுகிறுர்கள்.

தலைவர் திரு. நடராசா: செயலாளர் இது விஷயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. துரைத்தினம் எம். பி.: முன்பின் யோசியாமல் அரசு சபைகளை அமைத்துவிட்டது. ஊரைப்பிரிககத்தான் இச்சபை வந்திருக்கிறது. இதைக் கவனிக்கவேண்டும்.

தலைவர் திரு. நடராசா: இவை பற்றி எம். பிக்கள் தான் பாராளுமன்றத்தில் பேசவேண்டும்.

* * * *

திரு. இராசேந்திரன்: இந்த அபிவிருத்திசபையின் புதிய அமர்வு வைபவம் நல்ல முறையில் நடைபெற்றதற்கு தலைவரைப் பாராட்டுகிறேன். ஆனல் சில தவறுகளும் நேர்ந்திருக்கின்றன.

தலைவர் திரு. நடராசா: என்ன தவறுகள்?

திரு. இராசேந்திரன்: எல்லா திணைக்களங்களின் தலைவர்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டபோதும் பனம்பொருள் அபிவிருத்திசபை தலைவருக்கு அனுப்பப்படவில்லை. இதனல் வேறுசில வியாக்கியானங்கள் எழுந்திருக்கின்றன. தலைவர்தான் இதற்குப் பதிலளிக்கவேண்டும்.

தலைவர் திரு. நடராசா: வேறு கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும் இடவசதியின்மையால் அழைப்புகள் அனுப்பப்படவில்லை எனபதை கௌரவ அங்கத்தவர் உணரவேண்டும்.

[இக் கட்டத்தில் திரு. இராசேந்திரன் குறுக்கிட்டுப் பேசிக்கொண்டிருந்தபொழுது தலைவர் தனது மேசை மேல் இருந்த மணியை மூன்று முறை அடித்து அவரை அமரும்படி பணித்தார்.]

திரு. எஸ். நாகராசா: வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவருக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை.

* * *

திரு. எம். ஆலாலசுந்தரம் எம். பி.; எங்களுக்குள்ள அதிகாரங்களை நாங்கள் பயன்படுத்தாமல் விடுகிறோம். இதை வேறு யார் கையிலும் கொடுக்காமல் நிறைவேற்றுக்குழுவிடம் ஒப்படைக்கவேண்டும்.

* * * *

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்: உப அலுவலங்களுக்குச் சொந்தமான காணிகளை திடீர் திடீர் என சுவீகரிப்பது உத்தேசமல்ல: கிராமோதயசபைகள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோரின் அறிக்கைபெற்று தலைவருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுப்பது உசிதம்.

தலைவர் திரு. நடராசா: எது எப்படி இருந்தாலும் உங்கள் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

* * * *

வைத்திய கலாநிதி ஆ. நடராசா: காக்கைதீவு இறங்குதுறை இருக்கும் சந்தையை வேறிடத்தில் மாற்றியமைக்க வேண்டும் இச்சந்தையில் மீனவர்களுக்கும் – வியாபாரிகளுக்கும் வித்தியாசம் தெரியாமலிருப்பதால் பிரச்னைகள் எழுகின்றன.

திரு. ஜே. எஸ். அழகையா: இச்சந்தையில் உயிர்ப்பலிகூட எடுக்கப்பட்டிருக்கிறது.

* * * *

திரு. சு. நடேசு: வட்டுக்கோட்டைத் தொகுதிலுள்ள நீலங்காடு, வேரப்பிட்டி, மாதடை ஆகிய கிராமங்களில் 20 குடும்பங்களுக்கு மேல் குடிநீர் வசதியற்ற நிலையில் இருப்பதால் 'பவுசர்' மூலம் உடனடியாக தண்ணீர் விநியோகிக்கவேண்டும்.

திரு பூபாலசிங்கம்: தண்ணீர் வசதியற்றிருக்கும் இந்தப் பின்தங்கிய பகுதி மக்கள் கிணறுகளுக்கு அதிகாலையிலேயே செல்கிறுர்கள். வசதியுள்ளவர்கள் பீப்பாக்களில் நீர் நிரப்பும் வரை அவர்கள் கால்கடுக்க காத்து நிற்கவேண்டியிருக்கிறது. இதனல் பல இன்னல்களும் நேர்ந்திருக்கின்றன.

திரு. சு. நடேசு: குறிப்பிட்ட பகுதி மக்கள் நிறைவேற்று சொந்தக்காரர்கள் தண்ணீர் ஊற்றும் வரை காத்து நிற்க வேண்டும். 1970ம்ஆண்டில்காலஞ்சென்றவட்டுக்கோட்டை எம். பி.திரு. ஆ. தியாகராசா தமது சொந்தக் கிணற்றில் தண்ணீர் அள்ள உதவி செய்தார். இப்பொழுது அவரில்லாததால் அக் கிணறும் தடைசெய்யப்பட்டால் அந்த மக்களுக்கு வேறு வசதியில்லை.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி.: மக்களுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் நாங்கள். குடிதண்ணீர் பிரச்னை எனது தொகுதியிலும்உண்டு. பணத்தை அரசாங்கத்துக்கு மிச்சம் பிடிக்கவிடாமல் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தலைவர் திரு. நடராசா: விரைவில் பவுசர் மூலம் நீர்வழங்க நடவடிக்கை எடுப்பதுடன் பொது கிணறும் அமைக்க ஏற்ற ஒழுங்குகள் செய்வோம்.

* * *

திரு. மு. தம்பிமுத்து: சில எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய நூல்களை வெளியிட முடியாமலும் நூல்களை வெளியிட்டவர்கள் கடனுளிகளாகவும் இருக்கிறுர்கள். எமது கலைகலாசாரத்தை வளர்க்க இச்சபை நிதி ஒதுக்கீடு செய்து ஆற்றலுள்ளவர்களை வளர்க்கவேண்டும்.

திரு. துரைத்தினம் எம். பி.: இச்சபை பழையகால மன்னர்களைப் போல் அண்ணுவிமார்களை கூப்பிட்டு கௌரவிக்க வேண்டும். உலோகங்களில் மற்றும் மரங்களில் சிற்பங்களை செதுக்கும் கைவினைஞர்கள், சங்கீத வித்துவான்களை நாங்கள் பேணிக்ககாக்கவேண்டும். [மா]

# "தமிழ்மக்களின் சுபீட்சம் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது"

## 'அமிர்' கூறுகிறுர்

[அரியாலை]

''தமிழ் மக்களின் சுபீட்சம் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. ஒற்றுமையை வலுப்படுத்தச் சமூகக்குறைபாடுகள் முற்றுகக் களையப்பட வேண்டும். சமூகக் குறைபாடுகளைக் களைதற்பொருட்டு தமிழர்விடுதலைக்கூட்டணி உறுதியான கொள்கையுடன் செயல்பட்டு வருகிறது.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகமும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசப் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசப் பிரதிநிதிகள் நடத்திய கலந்துரையாடல் மகாநாட்டில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது: ''சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம் தமிழ்ச் சமூகத்தின் ஐக்கியத்திற்கும், சுபீட்சத்திறகும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயல்படவேண்டுமெனவும் சமாசத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளைக் கவனத்திலெடுத்துகூடிய விரைவில் அவைகளை நிறைவேற்றிவைக்க தமிழர் விடுதலை கூட்டணியின் பாராளுமன்றப் பிரதிநிதிகளும், நானும் நடவடிக்கை எடுப்பதாகவும்கூறினர்.

''இந்த வைபவத்திற்குத் தலைமைதாங்கிய சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத் தலைவர் திரு. இ. மு. நாகலிங்கம் பேசுகையில் கூறியதாவது: ''ஒரு சமூகம் குறித்த ஒரு தொழிலைச் தான்செய்யப்பிறந்தது என்ற நிலைமையைமாற்றி துரிதமான தொழிற் பெயர்ச்சிக்கு வழிவகுத்து சமூகக்குறைபாடுகளை ஒழிக்க சட்டநடவடிக்கைஎடுக்க வேண்டுமென்றும், இதன்பொருட்டு கூட்டுறவுத் துறை, தனியார்துறைகளில் வேலைவாய்ப்புக்களைப்பெறவும் கைத்தொழில், வியாபாரம், விவசாயத்திட்டங்கள்போன்றவற்றில் ஈடுபடச்செய்யவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைபெற்றுக்கொள்ளவும், தமிழர் விடுதலைக்கூட்டணி சமூக முன்னேற்றக் கழகத்திற்கு உதவ வேண்டுமென்றும், சமூகக் குறைபாடுகளை வேரோடு களைவதற்கான ஒரு செயல் திட்டமாக குடிமைத்தொழில் முறையைத் தாமதமின்றி நீக்கவேண்டுமென்றுர். [வெ]

## ஆசிரியர் கருத்தரங்கு

(கரவெட்டி)

கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான மறைக்கல்விக் கருத்தரங்கு ஜூலை மாதம் இரண்டாம் திகதி பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர்சங்கத்தினுல் இக் கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

### யாழ். அபிவிருத்திசபை கொள்கைப் பிரகடனம்-5

# நுண்கலைகளின் தரத்தை உயர்த்த நிதி உதவி வழங்குவோம்!

(யாழ். மாவட்டசபையின் அமர்வு கடந்த 12-ந் திகதி நடைபெற்றபோது சபைத் தலைவர் திரு. சு. நடராசா நிகழ்த்திய கொள்கை விளக்க உரையின் மேலும் ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது)

## சுகாதாரசேவை

அபிவிருத்திசபையின் அதிகாரத்திற்குட்பட்ட அம்சங்களில் சுகாதாரசேவை முக்கியமான தொன்றாகும். எமது மாவட்டத்தின் வைத்தியசாலைகளில் உள்ள நோயாளிகள் கவனிக்கப்படும் தன்மை மிக உயர்ந்ததாக இருந்தாலும், உலகின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது அவர்களுக்குக் கிடைக்கும் வசதிகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. வடமாகாண மக்களின் தேவைகளைக் கவனிக்கும் யாழ் மத்திய வைத்தியசாலை கடந்த சில சகாப்தங்களாகத் திட்டமிட்ட வளர்ச்சியைப் பெறவில்லை. ஆயினும் இத் தேவையினையே சமாளிக்க வசதியற்றிருக்கும் இவ் வைத்தியசாலை யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு கல்வி கற்கும் வசதியினையும் அளிக்க வேண்டியேற்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலையை நவீனமயப்படுத்தும் ஓர் அம்சமாக அபிவிருத்திசபை 2.5 கோடி ரூபா செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டுவதற்கான நடவடிக்கையில் முனைந்துள்ளது. மூன்று வருடங்களில பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படும் இத்திட்டத்தின் பிரகாரம் இக் கட்டிடம் 450 படுக்கைகள் கொண்டதாயிருக்கும். யாழ் வைத்தியசாலையை மட்டும் அபிவிருத்திசெய்தால் போதாது. கட்டிடங்களையும் மற்றையவசதிகளையும் கொண்டவையாக சுற்றுப்புறத்தில் உள்ள வைத்தியசாலைகளும் மறுசீரமைக்கப்படுதல் வேண்டும். மருத்துவக்கல்லூரிக்கு அண்மையாக தனியான மருத்துவப் பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைத்தல் வேண்டும் ஆயினும் இது வெளிநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவேண்டிய ஒரு பாரிய திட்டமாகும்.

## ஆயுள்வேத வைத்தியம்

பல்லாண்டு காலமாக சுதேச வைத்தியம் எமது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இதுவரையில் புறக்கணிக்கப்பட்டுவந்த இத் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எமது அபிவிருத்திசபை மேற்கொள்ளும் மூலிகைகளை விஞ்ஞானரீதியில் முறையாக பயிரிட்டு வளர்க்க ஓர் திட்டத்தை அபிவிருத்திசபை மேற்கொள்ளும். சித்த ஆயுள்வேத ஔஷதங்களை நவீன முறையில் தயாரிக்கும் முயற்சியுடன் இது இணைக்கப்படும்.

## கலாசார விவகாரம்

சுதந்திரம்பெற்ற காலம் தொடக்கம் கலாசாரத்துறையில் குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சி ஏற்பட்டுவந்துள்ளது. நுண்கலைகளைப் பற்றிய ஆர்வமும் அவற்றைக் கூடுதலாக ரசிக்கும் தன்மையும் வளர்ந்து வந்தள்ளது. இசையிலும் நடனத்திலும் அதிக மாணவர்கள் இப்பொழுது ஈடுபட்டு வருகின்றனர். இது மிகவும் வரவேற்கத்தக்க வளர்ச்சியாகும். எனினும் இதை வளர்ப்பதற்கு அரசின் ஆதரவு கிடைக்கவில்லை. நுண்கலையின் தரத்தினைப் பொறுத்தவரையில், அதற்கு அளிக்கப்படும் ஆதரவின் மூலமே கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட இடமுண்டு. இதற்கு வேண்டிய நிதியுதவியினை அளிக்க அபிவிருத்திசபை முன்வரும்.

சில முக்கிய விடயங்களுக்கு உதவும்வகையில், ஓர் பல்கூட்டொருமைக் கட்டிட அமைப்புடன் கூடிய கலாசாரநிலையம் நிறுவப்படுவது மிகவும் அவகியமாக வேண்டப்படும் ஒன்ருகும். நுண்கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு 1500 இருக்கைகள்வரை கொண்ட நவீன கேட்போர் அவைக்கூடம் ஒன்று வேண்டியுள்ளது. கலாசாரநிலையம் ஒன்றிருப்பின் அது இலங்கை முழுவதிலும் இல்லாவிடினும், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களை ஈர்க்கும். இப்பொழுது பல மாணவர்கள் இசையையும், நடனத்தையும் திறமையுடன் பயின்று உயர்தேர்ச்சியடைந்தாலும் பொதுஅரங்கநிகழ்ச்சியளிக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டுவதில்லை.

ஆகவே கலாசார உலகிற்குள் அவர்கள் புகும் வைபவமான 'அரங்கேற்றம்' அவர்களுக்கு முதல் நிகழ்ச்சியும், இறுதி நிகழ்ச்சியுமாக அமைந்துவிடுகிறது. உலகிலுள்ள சிறந்த கலைஞர்களின் வரிசையில் எமது கலைஞர்களும் இடம் பெறக்கூடிய நிலையினை அடைவதற்கு இக்குறைபாடு நீக்கப்படவேண்டும். இதற்குத் தனிப்பட்ட பிரயத்தனம் மாத்திரம் போதாது என்பதால் அபிவிருத்தி சபையின் ஆதரவு இங்கு அவசியமாகிறது.

எம்மிடையே திறமைமிக்கவர்களாகவும், அதேசமயம் பிரபல்யம் பெருதவர்களாகவுமுள்ள எழுத்தாளர்களும், கவிஞர்களுமுளர். இவர்களது ஆக்கங்களிற் பல, மக்களைச் சென்றடையாதிருப்பதே கவலைக்குரியதாகும், இவ்விடயத்திலேதான் எமது இளம் எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் முன்னணிக்கு இட்டுச்செல்லும்வகையில் அவர்களுடைய ஆக்கங்களைப் பிரசுரிக்க நிதியுதவி போன்ற ஆதரவு கைகொடுக்கும். அபிவிருத்தி சபை இவ்வாருன ஆதரவினை விஸ்தரிக்கவுள்ளது.

## எமது பழைமையைப் பேணுதல்

இலங்கைத் தமிழர்கள் தமது பழைமையையிட்டு மிக உணர்வுள்ளவர்களாகவும் தமது கலாசார வரலாற்றினையிட்டுப் பெருமைப்படுபவர்களாகவும் உள்ளனர். அவர்களது வரலாறு பெருமையையும், ஆர்வத்தினையும் அளிக்குமொன்ருகும். பல நூற்ருண்டுக்கு முந்திய அவர்களது கலாசாரத்தினையும், நாகரீகத்தினையும் விளக்கக்கூடிய பல தொல்பொருள் எச்சங்கள் உள்ளன. எனினும் இத்துறையில் போதிய ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படாதமை துரதிஷ்டவசமானதாகும். ஆயினும் இப்பொழுதுகூட அகழ்வுகள், ஆராய்ச்சிகள் முதலியவற்றை மேற்கொள்வதற்குக் காலம் கடந்துவிடவில்லையெனலாம்.

எமது பண்டைய நாகரீகத்தைக் குறிக்கும் பௌதிக எச்சங்களைப் பேணவேண்டியது அவசியமாகும். அபிவிருத்தி சபையின் ஆதரவில் யாழ்ப்பாணத்தின் கடைசி அரசனின் வாசஸ்தலமான சங்கிலித்தோப்பினை பேணிப்பாதுகாக்க ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 194?ம் ஆண்டிலேயே இவ்விடத்தினைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது கவனிக்கப்பாலது. இவ்விடத்தினைப் பேணிப்பாதுகாக்கும் பயனுள்ள நடவடிக்கைகள் மேலும் தாமதமடையக்கூடாதென்பதுடன், அபிவிருத்திசபை இவ்விடயத்தில் கலாசார அமைச்சு, தொல்பொருளாராய்ச்சித் திணைக்களம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உதவியைக் கோரவுமுள்ளது.

(நாளை தொடரும்)

---

# நள்ளிரவில் வேலிகள் மடங்கள் தீப்பற்றிஎரிந்தன

(சுழிபுரம்)

நள்ளிரவில் ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் வேலிகள், மடங்கள் தீப்பற்றி எரிந்த சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு பண்ணாகம் வட்டுக்கோட்டை பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. தீச்சுவாலை பரவியதையடுத்து மக்கள்ஒன்றுகூடி தீயைஅணைத்தனர். பண்ணாகம் பிரதான வீதியிலுள்ள ஐவருக்குசொந்தமான வேலிகள் எரிந்து பின் அணைக்கப்பட்டுள்ளது.

போக்கு வரத்து வழிப்போக்கர்கள் தங்கும்மடம் முற்ருக எரிந்துகொண்டு இருக்கையில் நூர்க்கப்பட்டுள்ளது. இச் செயல் சில விஷமிகளால் செய்யப்பட்டிருக்கும் என சந்தேகிக்கப்படுகின்றது.

---

# சீமெந்து விநியோகம் அமிரிடம் புகார்

[மாவிட்டபுரம்]

பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதலான சீமெந்தை வழங்கி பாவனையாளர்களுக்கு போதிய சீமந்து கிடைக்க வழிவகுக்குமாறு எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. அ.அமிர்தலிங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோர இருக்கிருர்.

பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சீமெந்து விநியோகத்தை மேற்கொள்ள காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை நிர்வாகம் அண்மையில் முடிவு செய்திருந்தபோதும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு போதிய சீமெந்து வழங்கப்படவில்லை யென்றும் இதனுல் பாவனையாளர்கள் பெரிதுயி பாதிக்கப்படுவதாகவும் மம்லிட்டி தெற்கு கிராமோதய சபையினர் திரு. அமிர்தலிங்கத்திடம் முறையிட்டனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கூடிய சிமெந்தை விநியோகிக்க ஏற்பாடு செய்து பாவனையாளர் கஷ்டங்களைப் போக்குமாறு அவர்கள் கோரினுர்கள்.

இதனையடுத்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு ப. நோ. கூ. சங்கங்களுக்கு கூடுதலான சிமெந்து வழங்க வற்புறுத்துவதாக திரு. அமிர்தலிக்கம் தெரிவித்துள்ளார்.

---

# யாழ். மாநகர அபிவிருத்தி குறித்து மகாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர அபிவிருத்தி குறித்து ஆராயும்முகமாக யாழ். மாநகரசபை மண்டபத்தில் மகாநாடு ஒன்று நடைபெற்றது.

யாழ். மாநகராட்சி மன்றத் தலைவர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் எதிர்க்கட்சி முதல்வர் திரு.அ. அமிர்தலிங்கம், யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன், த. வி. கூட்டணியைச் சேர்ந்த மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள், மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

யாழ். மாநகரசபை பகுதியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் இனிமேல் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள்குறித்து இம்மகாநாட்டில் ஆராயப்பட்டது.

திட்டங்கள் சில நிறைவேற்றுவதற்கு கொழும்பிலுள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் எடுப்பதுகுறித்தும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(மா-இ)

---

# புலமைப்பரிசில் பெற்ருர்

[பண்டத்தரிப்பு]

சோவியத் நாட்டின் தலைநகரான மாஸ்கோ நகரில் நடைபெறும் கூட்டுறவு முகாமைத்துவ பயிர்சி நெறிக்கான புலமைப் பரிசிலை காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச்சங் பொதுமுகாமையாளர் திரு. எஸ். நகுலேஸ்வரன் பெறவுள்ளார். மாஸ்கோ நகரில திரு. நகுலேஸ்வரன் ஒன்பது மாத காலம் தங்கியிருந் மேற்படி பயிற்சியை பெறுவார்.

---

# சிறப்பான வரவேற்பு

[கரவெட்டி]

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற அந்தணந்திடல் கிராம அபிவிருத்தி சங்கத்தின் 3வது ஆண்டு நிறைவு விழாவின்போது உடுப்பிட்டி எம்.பி. திரு. த.இராசலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ.ஐயாத்துரை ஆசியோருககு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கப்புதூ அந்தணந்திடல் மக்களால் அளிக்கத்பட்ட வரவேற்பின்போது உடுப்பிட்டி எம்.பி.யும், கரவெட்டி உதவிஅரசாங்க அதிபரும் கப்புதூ உபதபாற்கந்தோரில் அந்தணந்திடல் விநாயகர் ஆலயம் வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த ஊர்வலம் சுமார் ஒரு மைல் நீள தூரத்தைக் கொண்டிருந்தது.

---

# உயிர் தப்பினுர்

(பண்டத்தரிப்பு)

பனையால் விழுந்த சீவல் தொழிலாளி ஒருவர் தெய்வாதீனமாக உயிராபத்து எதுவுமின்றி தப்பினுர்.

சித்தன்கேணியைச் சேர்ந்த கே. செல்லத்துரை என்னும் மேற்படி சீவல் தொழிலாளி வட்டு. பிளவத்தையில் கள்ளு இறக்குவதற்காக பனை மரம் ஒன்றில் ஏறியிருந்தபோது தற்செயலாக கால் தவறி கீழே நிலத்தில் விழுந்துவிட்டதாகவும் சிறிய காயங்களுள்ள அவர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

---

# இடமாற்றத்தை நிறுத்தக் கோரிக்கை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிழக்கு கிராம சேவையாளர் திரு. அ. மகாதேவனை இடமாற்றம் செய்வதை உடனிறுத்துமாறு சுழிபுரம் கிழக்குப் பகுதியிலுள்ள சகல பொது இயக்கங்களும் ஒன்று சேர்ந்து அரசாங்க அதிபரையும், எம். பி.க்களையும் வேண்டியுள்ளன.

---

## மகாகும்பாபிஷேகம்

[சுழிபுரம்]

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் மகாகும்பாபிஷேகம் 4-ந் திகதி நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக கிரிகைகளை கோவில் குருக்கள் பிரம்மஸ்ரீ ச. வரதராசக்குருக்கள் பிரதம குருவாகவிருந்து நிறைவேற்றி வைப்பார்.

---

# பொருட்கள் கொள்முதல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களுக்கு கொழும்பிலுள்ள தீர்வையற்ற கடைகளில் பொருட்களை கொள்முதல் செய்யமுடியுமென்று பிரசாரம் செய்யப்படவுள்ளது. (வெ).

---

# பாலஸ்தாபன வைபவம்

(மாவிட்டபுரம்)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் வடக்குப்புறம் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு துர்க்காதேவி ஆலயம் இம் மாதம் 20-ந் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட உள்ளது.

பழைமை வாய்ந்த இவ்வாலயத்தினை சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் புதுமெருகுடன் கூடியதாகப் புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனையடுத்தே மேற்படி பாலஸ்தானம் இடம்பெறவுள்ளது. பாலஸ்தானத்தையடுத்து புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

---

# தமிழ் தேசிய வீரர்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழத்தேசிய வீரர்கள் தினத்தை தமிழ் ஈழ விடுதலை அணியினர் இம்மாதம் 22ம் திகதி அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

அன்றையதினம் யாழ். நகர வீதிகளில் காலை 9 மணியிலிருந்து 2 மணிவரை நிதிசேகரிப்பில் தொண்டர்கள் ஈடுபடுவார்கள் என்றும் 4 மணியிலிருந்து 6 மணிவரை தந்தை செல்வா சமாதியில் தமிழ் தேசிய வீரர்கள் ஞாபகார்த்த மாகபிரார்த்தனையில் ஈடுபடுவதோடு இரவு ஆறு மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தேசியவீரர்கள் நினைவாஞ்சலிக் கூட்டம் டாக்டர் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறுமென்றும் தெரிகின்யவருறது.

# ஜூன் 1 முதல் 5-ம் திகதிவரை தமிழ்இனத்தின்தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு தமிழ்ஈழ விடுதலை அணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு ஜூன் முதலாம் திகதியிலிருந்து ஐந்தாம் திகதிவரை அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஆட்சியாளரின் அனுசரணையுடன் ஆயுதப் படையினரின் அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்ட நாட்கள் யாழ்ப்பாணத்தின் கலைக் களஞ்சியமான நூல் நிலையம் உட்பட யாழ்ப்பாண மாநகரமும் சுற்றுப்புறங்களும் எரியூட்டப்பட்ட நாட்கள். இந்த நாட்களைத் தமிழினத்தின் தேசிய துக்க தினங்களாக தமிழ் மக்கள் அனுஷ்டிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலை அணியின் தலைமைச் செயற்குழு தமிழ்மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அவ்வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

1981 ஆம் திகதி நள்ளிரவிலிருந்து ஜூன் 5 ஆம் திகதி வரை அரசினால் தூண்டி விடப்பட்டபடைகள் யாழ்ப்பாண மாநகரையே தீ மூட்டி எரித்தன, கொள்ளையடித்தன. மக்களை கொலைசெய்தன.

யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரின் வீடும் வாகனமும் முற்றாக எரிக்கப்பட்டதுடன் அவரைக் கொலைசெய்யவும் முயற்சி செய்யப்பட்டது. 97000 மீளப்பெற முடியாத நூல்களைக் கொண்ட நூலகம் எரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் சுற்றுப்புறங்களிலும சந்தைகள், கடைகள் யாவும் எரிக்கப்பட்டு, சுடுகாடாய்க் காட்சியளித்த யாழ்ம்பாண நகரின் கோலத்தை எந்தத்தமிழனும்மறந்துவிட முடியாது.

### தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை

படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள், தட்டியெழுப்பப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். தெருவால் சென்ற தமிழர்கள் உட்பட ஆறுபேர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொடுங்கோன்மைச் சர்வாதிகாரம்— ஆயுதப்படைகளின் காட்டாட்சி நடைபெற்று ஓராண்டு முடிவடைகின்றன. இந்த அக்கிரமங்களையும், அநீதிகளையும், எந்தத் தமிழனும் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது.

அநீதியையும் அக்கிரமங்களையும் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது; சாத்வீக அஹிம்சை வழியில் அவற்றை எதிர்க்கவேண்டும் என்பதே தந்தை செல்வா நமக்குக்காட்டிச்சென்றபாதையாகும்.

● கறுப்புக் கொடிகளை எங்கும் பறக்கவிடவேண்டும்.

● பாடசாலை மாணவ, மாணவியர் உட்பட அனைவரும் கறுப்புப்பட்டிகளை அணிய வேண்டும்.

● குறிப்பிட்ட 5 நாட்களிலும் நாடகங்கள், கேளிக்கைகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை நடத்துவதையோ, அவற்றில் பங்கேற்பதையோ தவிர்க்க வேண்டும்.

● படமாளிகைகளுக்குச் செல்லாது அவற்றைப் புறக்கணிக்க வேண்டும்.

● கோவில்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும், மசூதிகளிலும் தமிழின மீட்சிக்காக விசேட பிரார்த்தனைகளிலும், உண்ணாவிரதத்திலும் ஈடுபடவேண்டும்.

---

## கிளைச் சங்கத்தில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சித்திரைமேழி கிளைச்சங்கம் இரவு வேளையில் உடைக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளன. சீத்தைத் துணிவகைகள் உட்படப் பால்மா மற்றும் நுகர்ச்சிப் பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

## பிரிவுபசாரம்

(துணுக்காய்)

கடந்த 10 வருடங்களாக கரச்சி வடக்கு பரந்தன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடனுதவு சந்தைப்படுத்தல் முகாமையாளராகக் கடமைபுரிந்து பட்டதாரி ஆசிரியர் பதவி கிடைத்து மாற்றலாகிச் சென்ற திருமதி உமா தவநீதராசாவுக்கு பரந்தன் ப.நோ.கூ. சங்க பணியாளர்கள், நெறியாளர்கள், கூட்டுறவாளர்கள் சேர்ந்து பிரியாவிடை வைபவத்தை சங்கமண்டபத்தில் நடாத்தினார்கள்.

இவ்வைபவத்திற்கு ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர்திரு.க. துரைசாமிதலைமை தாங்கினார். திருமதி உமா தவநீதராசா துணுக்காய்பகுதி ப.நோ கூ. சங்கத்சிலும் 3 வருடங்கள் இதேபதவியில்கடமை புரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## உரிய நேரத்தில் அரசை கண்டிக்கிறோம்; தட்டிக்கேட்கிறோம்

### 'அமிர்' கூறுகிறார்

[பண்டத்தரிப்பு]

''இன்று பல்வேறுவிதமான பொய்பிரசாரங்கள் எமக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இலட்சியத்தை கைவிட்டு, சலுகைகளைப் பெற அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றோம் என்றும் போர்க்கோலத்தை கைவிட்டு விட்டோம் 'என்றும் தவறான பிரசாரம் செய்யப்படுகின்றது. அரசியல் இயக்கம் என்பது காற்றோட்டம் இல்லாத அறை ஒன்றில்நடைபெறுவது அல்ல. எமது இலட்சியத்தை கைவிடாது அரசை எதிர்க்கவேண்டிய தேரத்தில் எதிர்த்து தட்டிக் கேட்க வேண்டிய நேரத்தில் தட்டிக் கேட்டு உறுதியுடன் செயற்பட்டு வருகின்றோம்'

மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தின் 35-வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித்தலைவரும் காங்கேசன் துறை தொகுதி எம். பி, யுமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு.நா.வ. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

'கடந்த பொதுத்தேர்தலுக்கு பின்ப தமிழ் மக்கள் மீது இனக்கொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. 300 க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். சொத்துக்கள் அழிக்கப்பட்டன, பல்வேறு இன்னல்களை எமதுமக்கள் அனுபவிக்க நேர்ந்தது ஜனாதிபதிஜே.ஆர். ஜெயவர்த்தனா அப்போது போர் வேண்டுமா? என்று பகிரங்கமாக கருத்து வெளியிட்டார். இராணுவம் பொலிஸ் மூலம் எம்மை அடக்கி விடலாம் என்று பார்த்தார்கள். எமது சுதந்திரத்தையும் தன்மானத்தையும் விட்டுக் கொடுக்க முடியாது என்று கூறினோம் வெளி நாடுகளில் செய்யப்பட்ட பிரச்சாரங்களினாலும் வெளிநாடுகளின் வற்புறுத்தல்களினாலும் அரசு சற்று பணிந்து தமிழினத்தின் சில கோரிக்கைகளை வழங்க முன்வந்தது''

1972-ம் ஆண்டில் அமரர் தந்தை செல்வா வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக்க வேண்டும் என்று கோரினார். ஆனால் அப்போதிருந்த சிறிமா அரசு அதை தட்டிக் கழித்தது இந்தஅரசுபதவிக்கு வந்த பின்பு வட கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக தமிழ் மொழியை ஏற்றுக் கொண்டது. ஆனால் அரசியல் அமைப்புச்சட்டத்தில் இடம் பெற்ற இந்த தமிழ் உரிமைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதுபற்றி நாம் அரசிடம் கேட்டபோது உங்கள் கட்சியிலிருந்த இராசதுரையைத் தான் தமிழ் மொழி நிர்வாக அலுவல்களுக்கு பொறுப்பாக நியமித்திருக்கின்றோம் அவரின் சுணக்கத்தினால் தான் இந்த தமிழுரிமைகள் நடை முறைப்படுத்த தாமதமாகின்றன என்று கூறப்பட்டது.''

### சிங்களக்குடியேற்றமே பெரியஆபத்து

''எம்மை எதிர்நோக்கும் பெரிய ஆபத்து சிங்களக் குடியேற்றமாகும். மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் இதைத் தடுத்துநிறுத்த முடியும் என்றும், அந்த அதிகாரங்கள் எமது கைகளில் இருக்கும் என்றும், அதைப்பெற்றால் ஓரளவு எமது பிரதேசத்தைப் பாதுகாக்க முடியும் என்றும் கருதி அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தினோம். இந்தியாவில் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டிருப்பதைப் போன்று எமது பிரதேசங்களுக்கும் மாவட்டஅபிவிருத்தி சபை மூலம் சில அதிகாரங்களைப் பெறவே தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றோம்''

''வெறும் உணர்ச்சிகளினால் மாத்திரம் எமது இனத்தை வழி நடாத்திவிட முடியாது. இளைஞர்களைக் கூட்டணியிலிருந்து பிரித்து எமது இனத்தின் ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் குலைத்து சிதறடிக்க சில சக்திகள் திட்டமிட்டு செயலாற்றிவருகின்றன இதையிட்டு மிகவும் கவனமாக இருக்கவேண்டும்,''

### 'நடா' உரை

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு, சு. நடராசா உரையாற்றுகையில், அமரர்தந்தை செல்வநாயகத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே கூட்டணி இயங்கி வருகின்றது. எமது அடிப்படை இலட்சியம் நிறைவுபெறும்வரை எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அரசின் உதவிகளை பெறுவதில் எவ்வித தவறும்இல்லை என்றார் மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் திரு. எஸ். பொன்னையா உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினார். [இ]

## புலமைப் பரிசில்

(துணுக்காய்)

சோவியத் ரஷ்யா அரசின் கீழ் வருடா வருடம் நடைபெற்றுவரும் கூட்டுறவுப் பயிற்சித்திட்ட புலமைப் பரிசில் துணுக்காய் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் திரு கு. சற்குணசேயோனுக்கு கிடைத்துள்ளது.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை இப்புலமைப்பரிசில் திட்டத்துக்கு இலங்கையிலிருந்து 10 பேரை அனுப்பி வைத்துள்ளது.

## கலைவிழா

(துணுக்காய்)

பரந்தன் இளைஞர் கலை வட்டத்தினர் எதிர்வரும் ஜூன் மாதம் 6ந்திகதி பௌர்ணமிக் கலைவிழாவை கொண்டாடவுள்ளனர்.

இவ்விழாவில் சிறவர் கலை நிகழ்ச்சிகள், கவியரங்கு, பட்டிமன்றம், பேச்சுப்போட்டி, தேனிசை மழை நிகழ்ச்சி, பொதுஅறிவுப்போட்டி, விளையாட்டுப் போட்டி, நாடகம் ஆகியன இடம்பெறவுள்ளன.

இதனைத்தொடர்ந்து ஒவ்வொரு பௌர்ணமித் தினத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடாத்தப்படும் என மன்ற இயக்குநர் திரு. ஆ. செல்வராசா தெரிவித்தார்.

## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பரிசளிப்பு விழா

(அரியாலை)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கல்லூரியின் திறந்த வெளியரங்கில் கல்லூரி அதிபர் திரு. எஸ். செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.ஆ.வ.தங்கராசா கலந்த கொண்டு பரிசளிப்பு உரை நிகழ்த்துவார். (இ)

---

### நாளை நடக்கும் தேர்தல்

## இரு வேட்பாளர்கள் மர்ம மறைவு!

புதுடில்லி, மே 17

இந்திய மாநிலங்கள் சிலவற்றில் இம்மாதம் 19-ந் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்ற இடைத் தேர்தலையும் சட்டசபைத் தேர்தலையும்யொட்டிய பிரசாரக் கூட்டங்கள் இன்றுடன் முடிவடைகின்றன.

மாநிலப் பொலிசாரும் மத்திய பொலிசாரும் தங்களது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டபோதிலும் சில இடங்களில் பதட்டநிலை காணப்படுகிறது.

நேர்மையான தேர்தல் நடைபெறஒத்துழைப்பு அளிக்குமாறு தேர்தல் அதிகாரி திரு. சத்தார் வேண்டுகோள் விடுத்துள்ளார். தேர்தல் நிலவரங்களைக் கவனிக்க சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க மேற்கு வங்காளத்தில் கிருஷ்ணா நகரில் காணமற்போன இரண்டு வேட்பாளர்களை உடன் தேடிக் கண்டு பிடிக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

கிருஷ்ணாநகரில் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை காணப்படவில்லை என்று தேர்தல் உயர் அதிகாரிகள் கருத்து வெளியிடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

காணமற்போன வேட்பாளர்கள் கொலை செய்யப்பட்டார்களா அல்லது தேர்தல் முடியும்வரை ஒழித்து வைக்கப்பட்டுள்ளனரா என்பது தெரியவில்லை. (கு)

## மகாபொல புலமைப் பரிசிலுக்கு தீர்வையற்றகடையிலிருந்தும் நிதி கிடைக்கிறது

[கொழும்பு]

கொள்ளுப்பிட்டியில் உள்ள தீர்வையற்ற வர்த்தக நிலையங்களில் பிரவேசச் சீட்டின்மூலம் கிடைக்கும் பணம் இனிமேல் மகாபொல புலமைப் பரிசில் கணக்கில் இடப்படும் என வர்த்தக கப்பல்போக்குவரத்து அமைச்சர் திரு. அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

இந்த புலமைப் பரிசிலுக்கு இதுவரை இரண்டு கோடி ரூபா கணக்கில்இடப்பட்டுள்ளதாகவும் பிரவேசச் சீட்டின் மூலம் வாராந்தம் 1,25,000 ரூபா வசூலாகியுள்ளது என்றும் இவ்வர்த்தக நிலையங்கள் பெரும்பாலும் இந்திய சுற்றுலாகாரர்களிடம் பிரபல்யம் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது என்றும் அவர் கூறினார். [கு-இ]

நான்காவது வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்—லதா
பல்லாண்டு வாழ்க

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
ஜெய்சங்கர் - மனோரமா
பொன்வண்டு

சாந்தி (யாழ்நகர்) Daily 5 Shows 17th and 18th Only
STANLEY BAKER IN
PERFECT FRIDAY
Action Packed Color Movie
21-5-82. முதல் கமல் கடல்மீன்கள் [கலர்]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
THUNDER BALL

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்
(புத்தம்புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (சில தினங்கள் மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

றீகல் [யாழ்ப்பாணம்] தினசரி 10.30, 2.30 6.15 9.30
விநோத் கண்ணா நடித்த
குச்சாய் டாக் Kuchchai Daag
(கலர்)
From 19-5-82 THE LAST HARD MAN

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
2-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
கார்த்திக் ★ ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

# இன்றைய பலன்

வைகாசிமாதம் 4ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(18—5—82)

மேடம்; துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர்விடுவதற்கு இடமுண்டு, இனிமையான பேச்சின்மூலம் எல்லோரையும் கவர்ந்து கொள்வீர்கள், அவசர அழைப்பு ஆச்சரியத்தைத்தரலாம்.

இடபம்; வாழ்க்கை புதிராகத் தோன்றும், ஆசாரக்குறைவுக்கு இடமுண்டு, சகோதரர் ஒருவரின் பிரச்னை மனதுக்கு வேதனையைத்தரும், அமைதி வேண்டும்.

மிதுனம்; படித்தவர்கள் மூலம் பயனடைவீர்கள். மாதுருவழி பெருமையும் உண்டு, சிலர் பதுமனை கட்டுவதற்கு ஆலோசனை செய்யலாம், நல்ல தினம்.

கடகம்; நடுநிலை தவறுது நல்லதைச் செய்வீர்கள், குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியை அளிக்கும், புத்திரர்மூலம் பாராட்டைப் பெறுவீர்கள்.

சிங்கம்: ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும் பகைவர்களின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். காணித் தொல்லையினுல் கடன்பட நேரிடும்.

கன்னி; சாஸ்திரவழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு, வாழ்வுப் பயணத்தில் வழமான திருப்பம் உருவாகும், நல்லதினமாகும்.

துலாம்; ஆணவப்போக்கு அடிசறுக்கவைக்கும், பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறலாம், மேலதிகாரியின் கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும்.

விருச்சிகம்: மனம்போல் வாழ்வு இன்று மலரும், கடமையாற்றுமிடத்திலே இன்று ஒத்துழைப்புக் கிடைக்கும், சிலருக்கு பதவி உயர்வும் கிடைக்கலாம்

தனு: எதிலும் முன்நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும், சொந்தமாகத் தொழில்செய்வதில் ஆர்வம்பிறக்கும்.

மகரம்; பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளுமுண்டு, இலட்சியப்பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

கும்பம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும் சிறியதலையிடிக்கு இடமுண்டு, புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

மீனம்: பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள், தற்பெருமையாகத் தவறான பாதையில் காலடி எடுத்து வைக்க நேரிடலாம். அவதானம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# தெல்லிஆஸ்பத்திரிகுறைகள் விரைவில் நிவர்த்தியாகும்

## "அமிர்" உறுதி

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் பல்வேறு குறைபாடுகளையும் தீர்க்க முடிந்த அளவில் நடவடிக்கை எடுப்பதாக எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறைப்பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார், மேற்படி வைத்தியசாலையில்அமைக்கப்படும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் "கோபால்ட யூனிற்" பிரிவு இயங்குவது நிச்சயமாகிவிட்டதென்றும் அவர் தெரிவித்தார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், வைத்தியசாலையின் குறைகள் குறித்து ஆராயுமுகமாக வைத்தியசாலையில் நடத்திய கூட்டமொன்றில் பேசும்போதே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்திய கலாநிதி செல்வி பொன்னுத்துரை கூட்டத்திற்குத் தலைமை தாங்கி வைத்தியக் குறைபாடுகளை எடுத்துக் கூறினுர்.

3 வருடங்களாக 'எக்ஸ்ரே' இயந்திரம் இல்லை. வைத்திய சேவைக்கேற்றதாகப் புதிய அம்புலன்ஸ் வண்டி இல்லை. வைத்தியர்கள் பற்றுக்குறை நிலவுகிறது. இவ் வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக்கி வைத்திய வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. இ. க. குலசேகரன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு "கோபால்ட் யூனிக்" பிரிவு கிடைக்குமா?. என கேட்டார்.

வைத்தியசாலைக்கருகிலுள்ள 32 பரப்புக் காணியை சுவீகரித்து வைத்தியசாலை அபிவிருத்திக்கு உபயோகிக்க வேண்டும் என திரு. இராமநாதன் சோர்னுர்.

வைத்தியசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திரு. எஸ். ஞானசுந்தரம் பல கஷ்டங்களுக்கிடையிலும் மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக அமரர் செல்வநாயகம் இவ் வைத்தியசாலையை அமைத்து உதவினுர். அவரது வழியில் செல்லும் திரு. அமிர்தலிங்கமும் இவ் வைத்திசாலை முன்னேற்றத்திற்கு பெரிதும்உதவ வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைஅபிவிருத்தியில் என்று நான் அக்கறை கொண்டுள்ளேன். இவ் வைத்தியசாலையை வைத்திய மாணவர் பயிற்சிக்கு உபயோகிக்க தீர்மானித்தபோது இதன்அபிவிருத்திபற்றி வலியுறுத்தினேன். தொடர்ந்தும் இவ் வைத்தியசாலையின் அபிவுருத்திக்குப் பெரிதும் உதவுவேன்.

வைத்திய அதிகாரிகள் தடடுப்பாடு நாடுமுழுவதும் நிலவுகிறது. யாழ். ஆஸ்பத்திரி விசேட வைத்திய நிபுணர்கள் இங்கு வருவதற்கு முன்னர் ஏற்பாடு செய்தபோது பிரயாணப்படி குறித்து சிக்கல் ஏற்பட்டதால் அது நின்றுவிட்டது எனினும் அவர்கள் இங்கு வர ஒழுங்குகளைச் செய்வேன்.

கடந்த வாரம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு எக்ஸ்ரே இயந்திரம் வழங்கப்படும் என காமினி ஜெயசூரியா கூறினுர். ஆனுல் அவர் இன்று சுகாதார அமைச்சராகல்லை. புதிய அமைச்சர் ரஞ்சித் இத்தபத்து நல்லவர். அவர் மூலம் இவ் வைத்தியசாலை குறைபாடுகளை நீக்க முயற்சி எடுப்பேன்

வைத்தியசாலைக்கென 32 பரப்பு காணியைச் சுவீகரிக்கப்போவதானு அதற்குப் பெருந்தொகைப்பணம் தேவை. ஆனுல் பணம் இப்போதைக்கு இல்லை. அடுத்தாண்டுதான் அதுபற்றி யோசிக்கலாம் என்றுர்.

தேநீர் விருந்தும் இடம் பெற்றது. (உ)

# "எழுத்தாளர் நூலாக்கங்களுக்கு அரசு உதவவேண்டும்"

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம் எழுத்தாளர் சந்திப்பொன்றையும் எழுத்தாளர்களுக்குள்ள பிரச்சினைகள் பற்றிய கருத்தரங்கொன்றையும் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இக்கருத்தரங்கிற்கு பதுளை சரஸ்வதி வித்தியாசாலை அதிபரும் கவிஞருமான திரு. எஸ். சபாரத்தினம் தலைமை வகித்தார்.

மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கச் செயலாளர் அன்புமணி இரா. நாகலிங்கம் அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

இன்று எழுத்தாளர்களுக்கு வாய்ப்புகள் குறைவாக இருப்பதாகவும் அவர்கள் தமது படைப்புகளை நூலுருவில் காண்பதில் பகற்கனவு தான் காண வேண்டியுள்ளதாகவும் எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை வெளியிடச் சலுகை அடிப்படையில் எழுத்தாளர்களுக்கு அரசு உதவ முன்வர வேண்டுமென்றும் தலைவர் திரு. எஸ். சபாரத்தினம் தமது உரையில் கேட்டுக் கொண்டார்.

பிரதேச ரீதியாக இன்று காணப்படும் எழுத்தாளர் சங்கங்கள் எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து எழுத்தாளர் ஒன்றியம் ஒன்றை நிறுவப் பழம் பெரும் எழுத்தாளர்கள் முன்வரவேண்டு மென்றும் பிரதேச அமைச்சு விரைவில் அந்நூலை வெளியிட வேண்டுமெனவும் புத்தொளி தமதுரையில் குறிப்பிட்டார்.

திமிலைத்துமிலன் செ. குணரத்தினம், நவம் அரவிந்தன், ஞானரதன், தவநாயகம் ஆகியோரும் தமது கருத்துக்களை எடுத்துச் சொன்னுர்கள். (அ)

யாழ். அபிவிருத்திசபையில்

# கணக்காளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திசபையில் கணக்குப் பதிவாளராகக் கடமையாற்றிய திரு. க. ம. இராஜேந்திரன், உள்ளூராட்சி சேவைப்பணிப்பாளரால் கணக்காளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் மானிப்பாய் சங்குவேலி தெற்கைச் சேர்ந்தவர்.

# தேவார இசைப் போட்டியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தினுல் நடத்தப்பட்ட அகில இலங்கை தேவார திருவாசக இசைப் போட்டியில் யா/திருக் குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் மத்திய பிரிவுக்குழு யாழ். வட்டாரத்தில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளனர்.

ராஜா (யாழ்ப்பாணம்)
திரையிடப்பட்ட எல்லாக் காட்சிகளுமே
ஹவுஸ்புல் காட்சிகள்;
தினசரி 10-30, 2-30, 6-15 இரவு 9-30
நகரத்தில் நல்ல படம்!
பெண்கள் கூட்டம் அலைமோதுகிறது!
ஜனக்கூட்டம் அலைமோதுவதால்
உங்கள் டிக்கட்டுகளுக்கு முந்துங்கள்!
இந்தியாவில் 225 நாட்களுக்குமேல்
ஓடிய வெற்றிப் படம்

ஸ்ரைல் நடிகர்
★ ரஜனிகாந்த் ★ விஜயன் ★ கராத்தே மணி
★ சுந்தரராஜன் ★ சுஜாதா ★ ரதி
★ சுருளிராஜன் ★ தேங்காய் சீனிவாசன்
அன்புக்கு நான் அடிமை
(ஈஸ்ட்மன் கலர்)

# வரி விளம்பரம்

## தேவை

பாதுகாவலர்கள் தேவை. ஓய்வுபெற்றவர்களும்வரலாம் நற்சாட்சிப்பத்திரங்களுடன் இம்மாதம் 19, 20 திகதிகளில் மாலை 5 மணிக்கு நேரில் வரவும். பாதுகாப்புச் சேவை, பிள்ளையார் கோவிலடி, புகையிரதநிலைய வீதி, தெல்லிப்பழை. 3214

சிறந்த பாடகர்கள், பாடகிகள், வாத்தியக் கலைஞர்கள், தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு பா. நாகேஸ்வரன்—மேஜர்ஷண் 29/1, கடைச்சாமி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 3182

யாழ்ப்பாணத்தில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையங்களில் வேலை செய்வதற்கு ரூபா 5000/- பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். ஆரம்ப வேதனம் ரூபா 6'0/- கொடுக்கப்படும். தபால்மூலம் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: 1, செட்டித்தெரு, யாழ்ப்பாணம். பெற்றோல்நிலையங்களில் வேலை செய்த அனுபவம்உடையவர்கள் விரும்பத்தக்கது. 25-5-82 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 3200

## விற்பனைக்கு

அரியாலை புனித யூதாததேயு கோவிலுக்கு அருகாமையில் 5 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. வோல்டர் சோரிஸ், 'பம்பினோ', கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. 3218

பலசரக்குக் கடைக்குகந்த தளபாடங்கள் விற்பனைக்குண்டு. ஐங்கரன் ஸ்ரோர்ஸ், 280, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 8311 (3224)

## விற்பனைக்கு

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலைக்கு எதிரில், சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில் 30 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொழிற்சாலை அமைக்கச் சிறந்தஇடம் (3 Phase Current வசதியுண்டு). விபரங்களுக்கு: த. தர்மசீலன், 33, அரச வீதி, உரும்பராய் கிழக்கு. 3?10

உரும்பராய் இந்துக்கல்லூரிக்கு வடக்குப்புறமாகத் தொடர்புகொண்ட ஒழுங்கை பாதையுடன் சிறுவீடும் 2பரப்பும் 5 குளிகளும் விற்பனைக்குண்டு. முக்கியமான தண்ணீர் வசதிகளுடன் உண்டு ஒரு கிழமைக்குள் தொடர்பு கொள்ளவும். வே. செல்வரத்தினம், உரும்பராய் இந்துக்கல்லூரிக்குப்பின். உரும்பராய் வடக்கு, உரும்பராய். 3222

## வாடகைக்கு

மாணவ, மாணவிகளுக்கு சாப்பாட்டுடனும், சகல வசதிகளுடனும் தங்குவதற்கு இடமுண்டு. தொடர்பு: செயலாளர், மல்ரி சேவிசஸ், த.டன்லப் ஸ்ரோர்ஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3209

## வலி-கிழக்கு, தெ. ப. ப. நோ. கூ. சங்கம்

## ஏலவிற்பனை

மேற்படி சங்கத்தால் ஏலவிற்பனை மூலம் கழிவுமா, சீனி, பழுதடைந்த லொறி ரயர், ரியூப் மற்றும் பாவனைக்குதவாத பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. ஏலவிற்பனை 21-05 82ம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு மேற்படி சங்க வளவினுள் நடைபெறும்.

பொதுமுகாமையாளர்.

நீர்வேலி,
1982 - 05 - 15 3220

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை அராலி வடக்கு, கந்தர் ருமனுஸ் கந்தர் வழக்காளி

இல. ஈடு/15081 எதிராக

யாழ்ப்பாணம் கொட்டடி தற்போது கொட்டடி பீச்றோட் முத்தமிழ்வீதி, 3ஆம் ஒழுங்கை

1. ஆறுமுகம் கந்தசாமியும்
2. பெண் சிவயோகம்
3. கந்தையா தவராசாவும்
4. பெண் இராசலட்சுமி
5. வேலு இளையவன் கைம்பெண் வள்ளிப்பிள்ளை

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/ 15081 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1982 ஆம் ஆண்டு மே (வைகாசி) மாதம் 24ஆம் திகதி [24 - 5 - 82] திங்கட்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 6851/-ம் இதில் ரூபாய் 6000/-க்கு 24-10-75 திகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 100க்கு 18 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 640-70 சதம். இதில் கோட்டுச் செலவு ரூபா 500/- இறுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை ''பன்னுவிலி தோட்டம்'' தெற்குப்பக்கமாக நெற்பரப்பு 1½ம. அதைச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை; கிழக்கு ஒழுங்கை, வடக்கு கொத்தன் செல்லனுக்கும் மறுபேருக்கும் உரிய இதன் மிகுதி ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு ஆறுமுகம் கந்தையா பெண் சிவயோகத்தின் ஆதனம். இதடங்கலும்.

2. மேற்படி இறை ''பன்னுவிலி தோட்டம்'' நெற்பரப்பு 2-ம். அதைச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை; கிழக்கும், மேற்கும் ஒழுங்கைகள், வடக்கு சின்னப்பொடியன் நாகனுக்கும் பெண்சிதம்பரத்திற்கும் உரிய ஆதனம், தெற்கு ஆறுமுகம் கந்தசாமி பெண் சிவயோகத்தின் ஆதனம் இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
ஏலவிற்பனையாளரும்.

தெல்லிப்பழை,
19 - 3 - 1982. 3216

## பேச்சுவார்த்தையில் சீனா - இந்தியா

புதுடில்லி மே, 17

சீனா—இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் பெரும் பிரச்னையைக் கொடுத்துவந்த எல்லைத்தகராறை தீர்க்கும் பொருட்டும் இருநாட்டுத் தூதுக்குழுக்களும் புதுடில்லியில் இன்று இரண்டாவது சுற்றுப்பேச்சில் ஈடுபட்டுள்ளன.

இந்தியத் தூதுக்குழுவுக்கு இந்தியவெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. எரிக்கொன்செல்லாசும், சீனாவின் தூதுக்குழுவுக்கு சீனா வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் திரு. புகுவாவும் தலைமை தாங்குகின்றனர். (கு

## பனம்பொருட்கள் விநியோகிப்பவர்களைப் பதிவு செய்தல்

பனம் பொருள் அபிவிருத்திச் சபைக்குப் பனம் பொருட்களை வழங்குபவர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களுக்கும், விபரங்களுக்கும் அவ்வப்பகுதி விசேட சேவை அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

க. நடராசா,
தலைவர்:
பனம் பொருள் அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகப்,
யாழ்ப்பாணம்.
3215

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற முத்துக்குமாரசுவாமி சந்திரசேகரன் என்பவரின் மரணசாதனத்தின் / மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

முத்துக்குமாரசுவாமி சந்திரசேகரன் கைம்பெண் இராஜேஸ்வரி - இமையாணன்

—மனுதார்

மரணசாதன ]
நியாயாதிக்கம் ] இல. 1141 T

1. சந்திரசேகரன் குமரேசன்
2. சந்திரசேகரன் குமார சூரியா

[சிறு பிள்ளைகள்]

3. சரவணமுத்து குமாரசூரியா, மயில்வாகன குமாரசூரியா இமையாணன்

பிரதிவாதிகட்கும் இடையில்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1982ம் ஆண்டு ஆடி மாதம் ... நாளன்று முற்பகல் ...... மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கே. செ[illegible]வராசா
பதிவாளர்

வரைவு
க. வ. சுப்பிரமணியம்,
சட்டத்தரணி

1982 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 12ஆந் நாளன்று இன்று தேதியிடப்பட்டது. 318

## அளவுக்கு மிஞ்சிய கசிப்பு அருந்தியவர் மரணம்

[துணுக்காய்].

துணுக்காய் பகுதியிலுள்ள தென்னியன்குளம் கிராமத்தைச் சேர்ந்த குடியேற்றவாசி ஒருவர் கசிப்பு அருந்தி மரணமானார்.

45 வயதுடைய 9 பிள்ளைகளின் தந்தையான வயிரமுத்து

[8-ம் பக்கம் பார்க்க]

## தபால் தந்தி...

[2-ம் பக்கத்தொடர்ச்சி]

கின்றனர். சில சமயங்களில் இங்கிருந்து சுமார் 13 மைல்கள் உள்ள மாங்குளம் தபாலகத்துக்கு சென்றுதான் முத்திரைகள்பெற்று கடிதம்போட வேண்டியுள்ளது. இத்தபாலகங்களில் அடிக்கடி ஏற்படும் வியாதியாகுமிது தந்தியை நாம் கொடுத்தால்அதை தபாலில் அனுப்புகிறார்கள். சில சமயங்களில தந்தியை ஏற்கமறுக்கிறார்கள். யாழ்ப்பாணம்' வேறு இடங்களிலிருந்துவரும் தந்திகளும் தபாலில் 2, 3 நாட்கள் தாமதித்தே வந்துசேர்கின்றது. இவ்விடயத்தில் முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகரும், வவனியா தொலை தொடர்புதிணைக்களத்தினரும் உடனடி கவனம் செலுத்தி தபால்தந்தி சேவையை இப்பகுதி மக்களுக்கு திறப்பட வழங்கவேண்டும்.

பொதுமகன்
வவனியா.

## நாட்டுக்கூத்து...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ளார். அவர் விட்டுச் சென்ற பணியை நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று வளர்க்க வேண்டும். அவரது இறுதி மூச்சுவரை தனது உயிர நாடியாகக் கூத்துக்கலையை வளர்க்கும் பொறுபபு எம்முடையதாகும் என்று குறிப்பிட்டார்.

சனசமூக நிலையச் செயலாளரும் யாழ் மாநகராட்சி மன்ற உறுப்பினருமான திரு. சுந்தரலிங்கம் நன்றி கூறினார்.

சச்சமோட்டை சனசமூக நிலையத்திலிருந்து ஆரம்பித்த இறுதி ஊர்வலத்தில் நாட்டுக்கூத்துக்கலைஞர்கள் இரங்கல் பாடல்களை நாட்டுக்-கூத்து மெட்டில் பாடிய படி சென்றனர். நாட்டுக்கூத்து கலைஞர்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலாநிதிக்கு அஞ்சலி செலுத்தி சேமக்காலை வரை பின்தொடர்ந்து சென்றனர்.

## ஜி. ஜி.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை முறையே 28, 830ம், 44,767ம் ஆகும். அவற்றில் முறையே 12,659,21,036 தொகையினரே அத்தேர்தல்களில் வாக்களித்தனர். இந்தத்தொகையை மொத்தவாக்குகளுடன் ஒப்பிட்டால் முறையே 43 91% 46.99% ஆகும். அமரர் பொன்னம்பலம் பெற்ற வாக்குகள் முறையே 10,627-1934 ஆம் ஆண்டு; 14,029-1936 ம்ஆண்டு ஆகும். அதுமுறையே 83.95% 66.69% வாக்களிக்கப்பட்ட தொகையின் விகிதம் ஆகும்.

திரு. இராசலிங்கம் 1977 ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டபோது தொகுதியின் மொத்த வாக்கு எண்ணிக்கை 39.955 ஆகும். அதில் தேர்தலில் வாக்களித்தவர்கள் எண்ணிக்கை 29,706 ஆகும். அதாவது விகிதப்படி தொகுதியின் மொத்த வாக்குகளின் 80.38% வாக்குகளாகும், திரு. இராசலிங்கம் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 18,768 ஆகும். அதாவது அவருக்கு வாக்களித்தோர் எண்ணிக்கையின் 63.18% வாக்குகள் கிடைத்தன. இப்போது இந்தஇரண்டு பேரில் யார் கூடிய வெற்றியைப் பெற்றார் என்றுதெரிகிறதல்லவா?

அது மாத்திரமல்ல. 1934ம் ஆண்டில் அமரர் பொன்னம்பலம் 32 வயதாக இருந்தபோது அவர் திரு. ஆர். சிறீ பத்மநாதனுடன் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். திரு. சிறீபத்மநாதன் 1930ம் ஆண்டிலிருந்து இலங்கை சட்ட சபையின் வடமாகாணத்தின் பிரதிநிதியாக இருந்தவர். 1936ம் ஆண்டு அமரர் பொன்னம்பலம் மேன்மை தங்கிய கே. பாலசிங்கம் அவர்களுடன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் திரு இராசலிங்கத்துடன் போட்டியிட்ட திரு. ஆர். ஆர். கர்மரத்தினம் அவர்கள் திரு. சிறீபத்மநாதனுடனோ மேன்மை தங்கிய கே பாலசிங்கம் அவர்களுடனோ தம்மை ஒத்துப்பார்க்க விரும்பமாட்டார் என நினைக்கிறேன்.

ஜி. ஜி. பொன்னம்பலம்
பொதுச்செயலாளர்.
அ. இ. த. காங்கிரஸ்

## காணி விற்பனைக்கு

மருதனமடச்சந்தியில் இருந்து உடுவில் பெண் பாடசாலைக்குப் போகும் ரோட்டில் மருதனமடச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்துள் ரோட்டு முகப்பாக 5 பரப்பு வெறும் காணி விற்பனவுக்குண்டு. பரப்பு ஒன்று ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட கேள்விகள் கவனத்திற்கு எடுபடும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

பெ. வெ. செல்லத்துரை
இளைப்பாறிய கிராமத் தலைமைக்காரன்
பண்டத்தரிப்பு. 3219

## திருமண அழைப்பு

மணமகன்: அருட்செல்வன் தானியேல் செல்வரத்தினம் தியாகராசா (நுணுவில் திருச்சபை ஊழியன்)

மணமகள்: திருவளர் செல்வி தயாளினி இராசரத்தினம்

காலம்: 24-5-82 திங்கட்கிழமை பி. ப. 5 மணி

இடம்: தெல்லிப்பழை C. S. I. தேவாலயம்.

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(பிரத்தியேக அழைப்பு இல்லை)

திரு. திருமதி
இ. க. தியாகராசா
363 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி
ப. இராசரத்தினம்
ஸ்ரேசன் வீதி
தெல்லிப்பழை

17-5-82 3195

### இலங்கை - இந்திய

# புடவைக்கடத்தல் திடீர் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

**இவ்வாண்டின் முதற்காலாண்டில் நடைபெற்ற 31 கள்ளக் கடத்தல் முயற்சிகளில் சுங்கத் திணைக்களத்தினர் 6 முயற்சிகளையும் இராணுவம், பொலிஸ், கடற்படையினர் முறையே 9, 11, 5 முயற்சிகளையும் முறியடித்துள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த இரு ஆண்டுகளின் இதே காலப்பகுதியில் இடம்பெற்ற முயற்சிகளைவிட அதிகமானதாகும். 1980-ம் ஆண்டு 15 முயற்சிகளையும், 1981-ம் ஆண்டு 19 முயற்சிகளையும் மட்டுமே இதேகாலப்பகுதியில் முறியடித்துள்ளனர்.**

சுங்கத் திணைக்களத்தினரை விட கடந்த இரு ஆண்டுகளாக பொலிஸ், இராணுவத்தினரே அதிகளவு முயற்சிகளை முறியடித்துள்ளனர் என்றும் பெருமளவிலான கள்ளக்கடத்தல் கடலில் வைத்தே முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1980, 1981-ம் ஆண்டுகளில் நடைபெற்ற அபின் கடத்தல் இவ்வாண்டு இதுவரை இடம்பெறவில்லை. 1980-ம் ஆண்டின் பின்னர் கெற்பு கடத்தல் எதுவும் துப்புத் துலக்கப்படவில்லை என்றும் முன்னைய இரு ஆண்டுகளில் இந்தியாவில இருந்து பீடி இலைகள்தான் பெருமளவுகடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இவ்வாண்டு இங்கிருந்து இந்தியாவிற்கும், அங்கிருந்து இலங்கைக்குமாக பெருமளவில் புடவைகளேகடத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு 'பொலிஸ்டர்' போன்ற துணி வகைகள் இங்கிருந்து இந்தியா விற்கும், அங்கிருந்து 'காஞ்சிபுரம்' போன்ற சேலைவகைகள் இலங்கைக்கும் கடத்தப்பட்டு பட்டு வருவதுடன், 'டேப் றெக்கோடர்' போன்றவையும் இங்கிருந்து கொண்டு செல்லப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இதுவரை இடம்பெற்ற கள்ளக்கடத்தல்களில் சுமார் 15 முயற்சிகள் புடவைக் கடத்தல் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு இதுவரையில் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுமார் பன்னிரண்டு லட்சம் ரூபா பெறுமதியான புடவைகள் பிரசித்த ஏலத்தில் விடப்பட்டன. 9 நுண் இழைக்கண்ணடி வள்ளங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றில் மூன்று வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டவை யென்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற ஆண்டிலிருந்து பல்வேறு காரணங்களால் பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகியவற்றின் பலம் இங்கு அதிகரிக்கப்பட்டதாலும் அவர்களுக்குப் பல வசதிகளை அரசு அளித்திருப்பதாலும் அதிகளவு கள்ளக்கடத்தல் முயற்சிகளை முப்படையினர் முறியடிக்க ஏதுவாக இருக்கிறது எனவும் கூறப்பட்டது. [சி]

## இப்படியும் நடக்கிறது

புகைப்பதில்லை என்றும், மதுபானத்தைத் தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை என்றும், புலால் உண்பதே இல்லை என்றும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்!

சத்தியம் செய்தவர்கள் யார்? மூவாயிரம் பேர்!

நீங்கள் நினைப்பதுபோல இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லை.

மீரிகாமம் தொகுதியைச் சேர்ந்த மூவாயிரம் பாடசாலை மாணவர்கள்தான் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளனர்!

மூக்கிலிருந்து விரலை எடுக்கின்றீர்களா?

'ஊடுருவி'

## விமலராஜா....

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

ராசாவும், மற்றும் மாணவர் அவை உறுப்பினர்களும் உரையாடியபின்னர் கைது செய்யப்பட்ட 5 மாணவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இதனைத்தொடர்ந்து மாணவர்கள் எல்லோரும் சுலோகங்களை மீண்டும் கோஷித்துக்கொண்டு காங்கேசன்துறை வீதி வழியாக சென்றுகொண்டிருக்கும்பொழுது, சிவன் கோவில் சந்திக்கு சற்று அப்பால், எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ அமிர்தலிங்கமும் திருமதி அமிர்தலிங்கமும் ஜிப்பில் வந்துகொண்டிருந்த பொழுது அவருக்கு எதிரான கோஷம் மாணவிகள்மத்தியில் எழுந்தது. இக்கட்டத்தில் ஜீப் நிறுத்தப்பட்டு, திரு. அமிர்தலிங்கம் ஏதோ கதைக்க முற்பட்டபோது ஊர்வலத்தின் முன்பாக தலைமை தாங்கிச் சென்ற மாணவர் அவைத் தலைவர் திரு. ராஜநாயகம் தலையிட்டு, ஜீப்பை சூழ்ந்து நின்ற மாணவர்களை விலக்கிவிட்டு, அவரை ஜீப்பில் ஏறிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

ஊர்வலமும் தொடர்ந்து சென்றது அப்பொழுது, இராணுவ ஜீப் ஒன்று வந்துகொண்டிருந்தது.

மாணவர்கள் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் கோஷமெழுப்பிச் சென்றுகொடிருந்தனா.

இவ்வீதியால் வாகனங்களின் போக்குவரத்துக்கு எதுவித இடைஞ்சலும் இல்லாதவகையில் மாணவ - மாணவிகள் ஒழுங்காக ஓரமாக வீதியின் இடது பக்கமாக ஒதுங்கிச் சென்று கொண்டிருந்தனர்.

ஊர்வலம்தொடர்ந்து நாச்சிமார்கோவில்சந்தியடைந்து, இராமநாதன் வீதிவழியாக பல்கலைக்கழகத்தை சரியாக பகல்1-30க்குசென்றடைந்தது.

## அளவுக்கு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் குடியேற்றவாசியே இவ்வாறு மரணமானவராவார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது;

தனது வயலில் கடும்வேலை செய்து விட்டு பகல் நேரம் சோறு அளவுக்கு மிஞ்சிய கசிப்பை அருந்தியதால் அவரின் ஈரல் கடுமையாக பாதிக்கப்பட்டு மரணமானுர்.

பின்பு மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடாத்தப்பட்டு யோகபுரம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. வேதநாதனுல் விசாரணை மேற் கொள்ளப்பட்டது

இறந்தவரின் மனைவி,பிள்ளைகளின் சாட்சியத்தை யடுத்து அளவுக்கு மிஞ்சிய கசிப்பு அருந்தியதால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது. மாங்குளம் பொலிசார் விசாரணை நடாத்தினர்.

## இம்மண்ணின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாஜத் தலைவா திரு. ஞானப்பிரகாசம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

டாக்டர் கோபாலன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''உலகத்திலே 32 நாடுகளில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். பாரதி நூற்றாண்டு விழா நாம் கொண்டாடுகின்றோம் ஆனல் எம் இனம் இன்னும் இன்னல்களுக்கு மத்தியில் வாழ்கின்றோமே என்பதனைச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இலங்கைத் தமிழர்களுக்குக் கொடுமைகளும், துன்பங்களும் ஏற்பட்டபோது, யாழ். நூலகம் எரிக்கப்பட்டபோது தமிழ்நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் இணைந்து கண்டன ஊர்வலம் நடத்தின. அதுமட்டும் அல்ல, தமிழக சட்டமன்றம்கூடத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அந்தளவுக்குத் தமிழ்நாடு ஈழத்தமிழ் மக்களுடைய பிரச்னையில் உன்னிப்பாகக்கவனித்துவருகிறது. இலங்கையில் கலவரம் ஏற்படும்போதெல்லாம் நாம் தமிழர்களோடு தமிழர்களாக இந்தியாசென்றுவிட்டால் சுகமாக வாழலாம் என்று மலையக மக்கள் நினைக்கக்கூடாது.

''இந்தியாவில் 24 மாநிலங்கள் உள்ளன. பல மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். இலங்கையிலிருந்துஅகதிகளாக அங்கு வரும் தமிழ் மக்கள் தமிழ்மொழி பேசாத மாநிலங்களில் குடியமர்த்த அனுப்பி வைக்கப்படுகின்றனர். அங்கும் கொடுமைகளுக்கு உள்ளாகின்றனர். இங்குள்ளவர்கள் இந்த மண்ணின் உரிமையுடையவர்களாக மாறவேண்டும்.''

விழாவில் தமிழ் முன்னேற்றக்கழக அமைப்பாளர் பெருங்கவிக்கோ டாக்டர் வா. மு. சேதுராமன், காந்திய அமைப்புச் செயலாளர் டாக்டர் எஸ். இராசசுந்தரம், திரு. இ. லோகசிங்கம், திரு இரா. சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [அ]

## முதலாண்டு நினைவாஞ்சலி

### துரையப்பா (சிவா) சிவானந்தன்



தோற்றம்: 08-09-1946
மறைவு: 28-05-1981

அன்பின் திருவுருவாய்,
பண்பின் பிறப்பிடமாய்,
சத்தியத்தின் இருப்பிடமாய்த்திகழ்ந்த, எங்கள்
தெய்வமே...... நீ மறைந்தாய்; ஓராண்டு மறைந்து விட்டதே. எல்லோர் மனதிலும் நிலைத்து விட்டீர்கள்! உங்கள் பிரிவால்
தினம் தினம் துயருறும்...

மனைவி, மகள்; தாய்,
சகோதரர்கள்,
உற்றுர் உறவினர்.

3229

## கிளிநொச்சி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றாக்குறை வெகுவாக அதிகரித்துள்ளது. ஒரே ஒரு ஆசிரியருடன் இயங்கும் பாடசாலைகளும் இங்கு உண்டு. எனவே ஆசிரியர் பற்றுக்குறை விரைவில் தீர்க்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் பலமுதல் தரக் கல்லூரிகளும் இங்கு நிறுவப்பட வேண்டும். கல்வி மூலவள நிலையம், முதல்தரமான நிரந்தர மத்திய நூல் நிலையம ஆகியன அமைக்கப்பட வேணடியதும் அவசியமாகும்.'' [கு]

## மரண அறிவித்தல்

### திருமதி தையல்நாயகம் சபாபதி

மல்லாகம் பதி இல்லத்தைச் சேர்ந்த திருமதி தையல்நாயகம் சபாபதி காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் கார்த்திகேசு சபாபதியின் அன்பு மனைவியும், சாரதா ஆசிரியை இராமநாதன் கல்லூரி சுன்னுகம், ஈஸ்வரி புங்குடுதீவு மகாவித்தியாலயம், செல்வேந்திரன் ஈஸ்வரி மருத்துவமனை காங்கேசன்துறை, Dr. ஆனந்தி மெடிக்கல் சென்டர் சுன்னுகம். ரவீந்திரன் பொறியியலாளர் U. K. ஆகியோரின் அருமைத்தாயாரும், நாகநாதன் ஆசிரியர் மல்லாகம் இந்துக்கல்லூரி, பாலச்சந்திரன் ஆசிரியர் ருகலை தமிழ் வித்தியாலயம், சுகிலா ஆசிரியை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் கீரிமலை, சிவராஜபிள்ளை ''புளோரா'' சுன்னுகம், Dr. புவனேஸ்வரி U. K ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரேமிலா, மேகலா, உதயக்குமார், பிரதீப்குமார், பிரசன்னு, சிவானி, சிராணி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார். அன்னுரின் பூதவுடல் இன்று [18-5-82] மாலை 4 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். 3230

## மரண அறிவித்தல்

### சி. பொன்னம்பலம்

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் சின்னத்தம்பி பொன்னம்பலம் சிவபதம் அடைந்தார். அன்னுர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற சரஸ்வதியின் அன்புத் தந்தையும், இளைப்பாறிய நீர்ப்பாசனப் பகுதிப் பணிப்பாளர் ஜெயசிங்கின் மாமனுரும், பிறேமாவதி, நித்தியவதி ஜெயசீலன் றேனுகாவதி, டாக்டர் மகேந்திரன், நித்தியானந்தன் ஆகியோரின் அன்புப்பேரனுரும் கீதாஞ்சலி சிறீராம், சிவராம் நகுலினி, ஆனந்தக்கிருஷ்ணன் ஆகியோரின் பூட்டனும், ஆவர். பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு செம்மணி மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

3232

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் மே மீ 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office] Sri Lanka under number Q.B. I00236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.